JANAVINODINI.

ஜனவிநோதினி.

இல. 12.] டிசம்பர் மீ 1889. [புஸ்த. XX.

C[illegible]TENTS.

Depen[illegible]eings upon one an[illegible] ... 265
Worldly [illegible]ce ... 268
Peculiarities of Divine Poets (*Conclusion*) ... 272
Sound and its wonders ... 277
The Life of a Bear, Chapter XVI ... 281
A life of luxury is a life of idleness ... 284
News and Notes ... 288

அட்டவணை.

பிராணிகள் ஒன்றைபொன்று ஆதாரமாய்க் கொண்டிருக்கின்றன ... 265
லௌகிக தந்திரம் ... 26[illegible]
தெய்விகக்கவிவாணர்களின் குணவிசேஷம் (முடிவு.) ... 2[illegible]
[illegible]சரமும் அதன் விசித்திரங்களும் ... [illegible]
ஓர் கரடியின் கதை, 16-ம் அத்தியாயம் ... 281
சொகுசான வாழ்க்கை சோம்பலுக்கிடம் ... 284
வர்த்தமானக் குறிப்புகள் ... 288

MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

ஜநவிநோதினி.

இல. 12.] டிசம்பர் மீ 1889. [புஸ்த. XX.

பிராணிகள் ஒன்றை யொன்று ஆதாரமாய்க் கொண்டிருக்கின்றன.

உலகத்திலுள்ள சராசரங்கள் யாவும் ஒன்றை யொன்று ஆதாரமாகக்கொண்டிருக்கின்றன. தேகவன்மையிலாவது புத்திகூர்மையிலாவது [illegible]ச்சிறந்தபிராணியும் அக்குணங்களில் மிகத்தாழ்ந்த பிராணிகளின் பேருதவியை நாடத்தக்கதாயிருக்கிறது. சராசரங்கள் யாவற்றிற்கும் இடம் தந்துகொண்டிருக்கும் இப்பூமியோ பிரிதிவு முதலாகிய பூதங்களைத்தனக்கு ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. அப்பூதங்களின் கலப்பினால் பூமியிலுள்ள பற்பல மலை-மணல்-கனிஜதாதுக்கள்-அளவிறந்த உவர்வஸ்துக்கள் ஆகிய இவைகளெல்லாம் மேலேசொல்லப்பட்ட பூதங்களின் பலவேறுபிரமாணங்களுக்கேற்ற கலப்புக்குத்தக்கபடி உண்டாய்வருகின்றன. இவ்வாறு பூதங்களின்செயற்கையினால் இப்பூமியுண்டாக,இப்பூமியின் சாராம்சங்களைக்கொண்டு பலவகையான விருட்சங்கள்-பூண்டுகள்-கொடிகள் முதலிய தாவரப்பொருள்கள் உற்பத்தியாகி ஜீவிக்கின்றன. இவ்வாறு உண்டான புல்-பூண்டு செடிமுதலியவற்றைச் சிறு கிருமிகள்,பலவகையான பூச்சிகள் முதலியவை தின்று உயிர்வாழ்கின்றன. இக்கிருமிகள் முதலிய அற்பஜெந்துக்கள் அனேக பறவைகளுக்கு ஆகாரமாகின்றன. பறவைகளோ அனேகமிருகஜாதிகளுக்கு இரையாகின்றன. மிருகங்களுக்குள்ளேசில மற்றவைகளுக்கு ஆகாரமாய்வருகின்றன. ஜீவராசிகளுக்குள்ளே மேலானநிலைமையிலுள்ளமானிடரும் மேற்கண்ட தாவரஜங்கமங்களுக்குள் ஏற்றனவற்றைக்கொண்டு உயிர்வாழ்கின்றார்கள். உலகத்திலுள்ள சராசரங்களெல்லாம் எப்படிதோன்றினவென்று மேலே கூறினோமோ அப்படியே ஒடுங்குகின்றன. மிருகாதிகள் இறக்க அவைகளைப்பட்சிகள் ஆகாரமாகக்கொள்கின்றன. பட்சிகள்மரிக்க அவைகளைப்பலவகையான கிருமிகளும் புழுக்களும் அரித்துத்தின்னுகின்றன. இந்தப்பிராணிகளின் பிரேதங்களெல்லாம் பூமியிலுள்ள தாவரவஸ்துக்களுக்கு ஆகாரமாகிப் பூதங்களோடு கலக்கின்றன. உலகத்திலுள்ளயாவற்றையும் தனக்குள் ஐக்கியம் செய்துகொண்டு அவற்றால் உயிர்வாழ்ந்துவரும் மனிதனும் கடைசியில் அவற்றிற்கெல்லாம் இரையாகி ஒடுங்கி பிரிதிவு முதலிய பூதங்க

ளின் தன்மையை அடைகின்றான். இவ்வுண்மையை விளக்கும்பொரு
ட்டே பெரியோர்கள் கடவுளைநோக்கித் தோத்திரம்செய்கையில் அடி
யில் வருமாறு கூறியிருக்கின்றார்கள்:—

"யானென்றுணர்த்துவ னெந்தைமேனாள்
அகிலலோகமும் அனந்தயோனியும்
நிகிலமுந்தோன்றநீ நினைந்தநாள்தொடங்கி
யெனைப்பலயோனியும் நினைப்பரும்பேதத்து
யாரும்யாவையு மெனக்குத்தனித்தனி
தாயராகியுந் தந்தையராகியும்
வந்திராதவ ரில்லையானவர்
தந்தையராகியுந் தாயராகியும்
வந்திராதது மில்லைமுந்து
பிறவாநிலனு மில்லையவ்வயின்
இறவாநிலனு மில்லைபிறிதில்
எனைத்தினுயிர்களு மில்லையானவை
தமைத்தினுதொழிந்தது மில்லையனைத்தே
காலமுஞ்சென்றது யானிதன்மேலினி
இளைக்குமா றிலனேநாயேன்."

இவ்வற்புதமான வாக்கின்கருத்தை நினைந்துநினைந்து யோசிக்குந்தோ
றும் எப்படிப்பட்ட அகங்காரியாயுள்ளவர்களும் தம்முடையஉண்மை
யான நிலைமையையுணர்ந்துய்வதற்கு இடமுண்டாகும். உலகத்திலு
ள்ள எல்லாப்பொருள்களும் நம்முடைய பிரயோசனத்திற்குத்தான்
சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், சகல ஜீவராசிகளும் நமக்கு
ஊழியம் செய்யவேண்டுமென்றும் எண்ணங்கொண்டு அகங்கரிப்பது
எவ்வளவு அறியாமை! "எனைத்தினுயிர்களுமில்லை." என்கி[illegible]சன
த்தை யோசிக்குமிடத்துக் கேவலம் கடை[illegible]வென்று நம்மால்
அலட்சியம்செய்யப்பட்டுவருகிற பொருள்களாகவும் நாம் ஒருகாலத்தி
லிருந்திருக்கவேண்டுமென்றும், அந்தப்பொருள்களுக்கு நாம் பேருத
வியாயிருக்கிறோமென்றும் தெரியவருகிறது. ஆகையால் உலகத்திலு
ள்ள சராசரப் பொருள்கள் யாவும் ஒன்றுக்கொன்று உதவிபுரிந்து வா
ழ்வதற்காகவே ஜகதீசரால் படைக்கப்பட்டனவென்று பிரத்தியட்ச
மாய்த் தெரியவருகின்றன. அதுநிற்க.

மனிதர்களுக்குள்ளேயே ஒவ்வொருவனும் மற்றொருவனுக்குப்
பேருதவி செய்துவருகின்றானென்றே நாம்கொள்ளவேண்டும். யாதொ
ரு கப்பலை ஓட்டிக்கொண்டுபோகும் மாலுமி தனக்குமாதந்தோறும் ஏ
தோ ஒருபிரதிபலனைக்கருதி அத்தொழிலைச்செய்து வருகின்றானாயா
யினும் அக்கப்பலில் அனேகருடைய சரக்குகள் அடங்கியிருக்கிறபடி
யாலும், அதில் அனேக பிரயாணிகள் ஏறி அங்கங்குபோவதற்கு அநு
கூலமாயிருக்கிறபடியாலும் அம்மாலுமி ஒருவன் தன் சொரூப சுயப்பி

சயோசனத்திற்காக அக்கப்பலை ஓட்டும் ஒருதொழிலானது-குன்றாத்த
து ஆறுகோடி ஜனங்களுக்குப் பிரயோசனகாமாயிருக்கும். எப்படி
யெனில்,அக்கப்பலில் ஏதியுள்ள பற்பலவியாபாரச்சரக்குகளும் அங்
கங்கு இறங்கப்படுகையில் அவற்றைக்கொள்வோரும் விற்போரும்
அனேக ஆயிரக்கணக்காயிருப்பார்கள்; அதனுல் பயனடைபவர்கள் ப
ல்லாயிரக்கணக்காயிருப்பார்கள். ஒருகுடியானவன் தான் பயிரிடும் தா
னியங்களுக்குள்ளே மிகச்சிறுபாகத்தைமாத்திரம்தான் நேரே அநு
பவிக்கின்றவனுயிருக்கின்ருன்.மற்ற பாகங்களையெல்லாம் அனேகர் அ
நுபவிக்கக்கூடியவர்களாயிருக்கிருர்கள். ஒருவன் எவ்வளவு சிறந்தவ
னுயிருக்கினும் ஒரு சுவர்தனக்கமையவேண்டுமானுல் எத்தனையோ ஆ
ள்களுடையதயவு அவனுக்குவேண்டியதாயிருக்கிறது. அதைக்கட்டுவ
தற்கு அந்தக்காலத்தில் வேண்டியவர்களாயிருக்கிற கொல்லற்றுக்கார
ன், பெரியாள், சிற்ருள் ஆகிய இவர்களுடைய உதவியை அவன் ஒரு
பெரும்பொருளாகக் கருதவேண்டியதில்லை. அக்கொல்லற்றுக்காரன்
உபயோகிக்கும் கொல்லறு எப்படிவந்தது? அது செய்யஇரும்பு எப்
படிகிடைத்தது? கேவலம் பிரிதிவு அம்சமாயிருந்த இருப்புமண்ணைச்
சிலர் சுரங்கங்களில் வெட்டியெடுக்கவும்,இன்னும் சிலர் அம்மண்ணைப்
பண்படுத்திக்காய்ச்சி இருப்புப்பாளங்களாக்கவும்,இன்னும் சிலர் அவ
ற்றைப் பில்லை பில்லைகளாகச்செய்து கொடுக்கவும், இன்னும் சிலர் அ
வற்றிற்குக் கூர்தீட்டிக்கொடுக்கவும் வேண்டிய அவசியமிருந்திருக்கு
மல்லவா? அதுநிற்க. அவ்விரும்பு இணைக்கப்பட்டிருக்கும் மரப்பிடி
எவ்வாறுகிடைத்தது? ஒருமரத்திலிருந்தல்லவோ சிலரால் வெட்டப்ப
ட்டிருக்கவேண்டும்? அந்தவிருட்சத்தைப் பயிர்செய்தவர்சிலரல்லவோ?
அதற்குத் தண்ணீர் பாய்ச்சினவர்களும், எருவிட்டவர்களும், அதை
ஆடுமாடு முதலியவைகள் மேயாமற்காப்பாற்றினவர்களும், அவ்வாறு
வேலைசெய்துகொண்டு வந்தவர்களுக்குச் சம்பளங்கொடுத்த எஜமான
ர்களும் எத்தனைபெயர் இருந்திருக்கவேண்டும்! அந்த எஜமானர்கள்
அக்கூலியாள்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக எவ்வளவு பிரயா
சைப்பட்டுத் திரவியஞ்சேடியிருக்கவேண்டும்! இவ்வாறே அச்சுவர் எ
ழுப்புவதற்கு இன்றியமையாப் பொருள்களாயுள்ள கல்,மண், சுண்ணா
ம்பு,ஜலம், அதைக்கொண்டுவருவதற்குத் தோண்டி,தாம்புக்கயிறு,வே
லையாட்கள் காலிலணியவேண்டிய செருப்பு முதலியவற்றின் ஒவ்வொ
ன்றும் வந்தவழியை யோசித்துப் புத்திமான்கள் பார்ப்பார்களாகில் எ
த்தனையோ மனிதர்களுடைய பிரயாசை அந்தச்சுவர்கட்டுவதற்காக
வேண்டியிருக்கிறதென்பதை நிதரிசனமாய்த் தெரிந்துகொள்ளலாம்.
இவ்வாறே நாம் ஒவ்வொருவரும் தினம் கையாண்டு அநுபவித்துக்
கொண்டுவருகிற ஒவ்வொருபதார்த்தமும் அனேக ஆயிரங்கோடி ஜன
ங்களின் காரியசித்தியாயிருக்கிறதென்றே தெரிந்துகொள்ளலாம். கே
வலம் நம்மால் அலட்சியம்செய்யப்பட்ட நீசனுயுள்ள ஒருவனுக்கும்
அவனை அடிமையாகக்கொண்டு இறுமாப்படைந்திருக்கும் பெரிய பிர

புவும் ஊழியம் செய்துகொண்டு வருகிறானென்பதை நாமறிந்து கொள்ளலாம். அவ்வடிமையாள் கௌபீனமாகக் கட்டிக்கொண்டிருக்கும் ஒரு கந்தைத்துணி எப்படிவந்தது? அவனுடைய எஜமானனாகிய பிரபு பஞ்சவர்த்தகம் செய்பவனாயிருக்கும்போது அக்கந்தைத்துணிக்கு மூலகாரணமான வியாபாரத்தை அவன் நடத்துகின்ற காரணத்தினாலே அவ்வடிமையாளுக்கு அவன் ஒருவிதத்தில் ஊழியம் செய்கின்றானென்றே சொல்லவேண்டும்.

மேலே காட்டப்பட்ட விஷயங்களையெல்லாம் சித்த சமாதானத்துடன் யோசித்துப் பார்க்கையில், உலகத்திலே எப்படிப்பட்டவனும் இறுமாப்படைவதற்கு இடமிராது. மேலும் ஒவ்வொருவனும் தன் தன் சுயப்பிரயோசனத்தையே கருதி ஒவ்வொரு காரியத்தையும் செய்துகொண்டுவருவானாயினும், அது அனேகருக்கு உபயோககரமானதாயிருக்கின்றது. இதை நோக்குகையில் உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும் பரஸ்பர உதவியினாலேயே உயிர்வாழ்ந்து வரவேண்டுமென்பது ஜெகதீசருடைய கருத்தென்று தோன்றுகிறது.

லௌகிக தந்திரம்.

உலகத்தில் சிலர் புத்தகங்களின் மூலமாகக் கல்வியை ஏராளமாய்க் கற்றும் லௌகிக தந்திரங்கள் எவ்வளவும் தெரிந்துகொள்ளாதவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் எவ்வளவு சிறந்த கல்விமான்களாயிருக்கினும், கல்வியறிவில்லாமல் லௌகிக தந்திரத்தில் வல்லவர்களாயிருப்பவர்களுக்கு முன்னே தோல்வியடைந்து, கல்வியினால் அடையற்பாலதாகிய சகல நலங்களையும் இழப்பார்கள். "களவுங் கற்றுமற." என்னும் பழமொழியை யோசிக்கையில் லௌகிக தந்திரங்கள் முதலியவற்றையும் ஒருவன் அறிந்தேயிருக்கவேண்டுமெனத்தோன்றுகிறது. அவைகளை யறியாவிடத்து அவனுடைய கலைஞானமெல்லாம் குடத்திலிட்டதீபம்போலாகும். நமது தேசத்தில் சில வித்துவான்கள் லௌகிகத்தன்மை தெரிந்துகொள்ளாமையினாலே துன்பப்பட்டார்களென்பதை விளக்கப் பல சரித்திரங்களிருக்கினும், ஒரு வித்துவான் தன்னை நெடுநாளாக ஆதரித்துவந்த இராஜனுக்குத் தான் இன்னானென்று காட்டிக்கொள்ள ஓர் செடியின்மேலேறிப் பெருநகைப்புக்கிலட்சியமானதை விளக்கும் ஒரு கதையை அடியில் எழுதுகிறோம்:—

ஓர் அரசனால் அனேக வித்துவான்களைக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஓர் சங்கத்தில் இலக்கண இலக்கியங்களிலும் மற்ற சாஸ்திரங்களிலும் மிகவும் வல்லவனான ஒரு புலவன்-லௌகிக விசாரணை அற்பமுமில்லாதவனாகவும், வெகுசாத்மிகனாகவும், மேதகனாகவும், அவ்வரசன் கேட்ட கேள்விக்குத் தக்கவுத்தரம் சொல்வதேயல்லாமல் வேறு வீண் பேச்சுகளொருக்காலும் பேசாதவனாகவுமிருந்தான். அவ்வரசனும் அ

னேக சாஸ்திரங்கள் கற்றவனாகையால் அப்புலவன்மீது அதிக தயவு வைத்திருந்தான். மற்ற வித்துவான்களெல்லாம் கல்வியில் அவ்வளவு தேர்ச்சியில்லாதவர்களாயிருக்கினும், லௌகிக யுக்திகள் நன்றாய்த் தெரிந்தவர்களாகையால், சதா அவ்வரசனிடத்தில் போக்குவரத்தாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வரசன் அப்புலவன் மீதுவைத்த அவ்வளவு அபிமானமும் கண்ணியமும் மரியாதையும் விசுவாசமும் தங்களிடத்தில் வைக்கவில்லையென்றும், அப்புலவன் தன்வீட்டிலிருந்தாலும் அவ்வரசன் அவனுக்கு மாதச்சம்பளமும் பண்டிகை நாட்களில் வெகுமானமும் வலியக்கொடுத்தனுப்புகிறானென்றும், தாங்கள் தினந்தோறும் அவன் அரண்மனைக்குவந்தாலொழிய மரியாதைகள் நடத்துகிறதில்லையென்றுங் கண்டறிந்து அவ்வித்துவான்கள் பொறாமைகொண்டு அவ்வரசனுக்கு அப்புலவன்மீது கோளுங் குறையுஞ் சொல்லத் தொடங்கினார்கள். அவ்வரசன் அப்புலவனுடைய குணவிசயங்களை நன்றாயறிந்தவனாகையால் அவ்வித்துவான்கள் அப்புலவன்மேல் எத்தனை கோள் சொல்லினும் அவற்றை நம்பாமலும் அப்புலவனிடத்திலே வைத்த அபிமானத்தைக் குறைக்காமலுமிருந்ததே யல்லாமல், அவ்வித்வான்கள் சதா அப்புலவன்மீது கோள் சொல்லுகிறதினாலும் அப்புலவன் அவ்வித்துவான்கள்மேல் ஒன்றும் சொல்லாமலிருப்பதினாலும் அப்புலவனிடத்திலிருந்த அபிமானம் அவ்வரசனுக்கு அதிகப் பட்டுக்கொண்டே வந்தது. அது கண்ட அவ்வித்துவான்களெல்லா மொருங்குகூடி அவ்வரசன் அரண்மனைப் படிக்காரருக்கு லஞ்சங் கொடுத்து அப்புலவனை அவ்வரசன் அரண்மனைக்குள் பிரவேசிக்கவொட்டாமற்செய்தார்கள். அப்படியே அக்காவற்காரர்கள் அப்புலவனை அரண்மனைக்குள் பிரவேசியாதபடி தடுக்கக் கண்ட அப்புலவன்-நாமாகவே அரசனிடத்திற்குப் போகாவிட்டாலும் அவ்வரசன் நமக்கு வழக்கப்படி சம்பளம் கொடுத்தனுப்பிவிடுவாரென்றும், ஒருவேளை நம்மை அவர் காணவேண்டுமாகில் அழைத்தனுப்புவாரென்றும் வைதிக சாந்தமா யெண்ணிக்கொண்டு தன் வீட்டிற்குப் போய்ச் சொஸ்தமாயிருந்துவிட்டான். அவ்வரசன் நாலைந்துதினம் வரைக்கும் அப்புலவனைக்குறித் தெதிர்பார்த்திருந்தும் அவன் வாராமையால் அப்புலவன் க்ஷேமத்தைக்குறித்து மற்ற வித்துவான்களைக் கேட்டான். அதற்கவர்கள்-அந்த சங்கதி எங்களுக்குத் தெரியாது, அதை விசாரித்து நாளைக்கு விண்ணப்பம் பண்ணுகின்றோமென்று சொல்லி, மறுநாள், ஐயா! அப்புலவருக்கு உடம்பு பக்குவமாயிருக்கவில்லை, சுரங்கண்டிருக்கிறதாமென்றார்கள். உடனே அவ்வரசன் தன் சமுக வைத்தியர்களைக் கூப்பிட்டு, நீங்கள் புலவர் வீட்டிற்குப்போய் அவர் கையைப்பார்த்து மருந்துகொடுத்து வாருங்களென்றனுப்பினான். அவ்வித்துவான்கள் அவ்வைத்தியர்களுக்கும் பரிதானங்கொடுத்து அவர்களையும் வசியப்படுத்திக்கொண்டார்கள். ஆதலால் அவ்வைத்தியர்கள் அவ்வரசனிடத்திற்போய் புலவருக்கு நாளுக்குநாள் உடம்பு பக்கு

வமாய்விருகின்றதென்று சொல்லி, சில தினஞ் சென்றபின் ஒருநாள் அப்புலவருக்கு அச்சுரநோய் மீண்டும் அதிகப்பட்டமையால் அக்நோய் அசாத்தியமாயிருக்கிறதென்று சொன்னார்கள். அப்படி சொல்லவே அவ்வரசன் அப்புலவனைப் பார்க்கவேண்டுமென்று தன் சிவிகையை எடுத்துவைக்கச் சொல்லித் தன் சிவிகையாட்களுக்குத் திட்டம் பண்ணுவித்தான். அப்போது அவ்வித்துவான்களிற் சிலர் வெகு துக்கமுகத்தோடே, ஐயா! அப்புலவருக்குத் தாங்கள் அனுப்பிய வைத்தியர்கள் என்ன ஔஷதம் கொடுத்தும் அந்த வியாதி தீராமல் அவர் இறந்துபோய்விட்டாரென்றார்கள். அதைக்கேட்கவே அவ்வரசன் மிகவும் வியசனப்பட்டு அப்புலவருடைய பிரேதத்தையாவது நாம் பார்த்துவருவோமென்றான். அது தெரிந்து அவ்வைத்தியர்களிலொருவன், ஐயா! அவருக்கு வந்தவியாதி மகாகெட்டது, தொத்துவியாதி, தாங்களோ உலகுக்கெல்லாம் ஒரே தந்தையாயிருக்கின்றவர், அச்சவத்தைச் சந்திக்கலாகாதென்றான். அதனால் அவ்வரசன் அவன் வார்த்தையைத்தடுக்கமாட்டாமல் தன் அரண்மனையிற்றானேயிருந்து அப்புலவனைக் குறித்து வியசனப்பட்டுக்கொண்டிருந்தான். பிறகு அவ்வித்துவான்கள் நானாவிதத்தில் அவ்வரசனுக்கு அத்துக்கத்தையாற்றினார்கள். அப்படியிருக்க அப்புலவன் தன்னைக்குறித்து அவ்வித்துவான்கள் மோசம்பண்ணியிருக்கிறார்களென்றும், அதை அவ்வரசனுக்கு அறிவிக்கவேண்டுமென்றால் தன்னைப் படிக்காரர் அரண்மனைக்குள் பிரவேசிக்கவொட்டுகிறதில்லையென்றும் தெரிந்துகொண்டு, இவையனைத்தையும் அவ்வரசனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று, ஒருநாள் அப்பட்டணத்திற்கு வெளியில் அவ்வரசன் சவாரிபோகையில், அந்த வழியிலுள்ள சாலையிலிருந்த ஓர் அரசமரத்தின்மேல் ஏறிக்கொண்டிருந்து, அவ்வரசன் தன் அருகில்வந்த சமயம்பார்த்து, ஐயா! இதோ உம்முடைய புலவனாகிய நானிருக்கின்றேன், உம்முடைய சமுகவித்துவான்களெல்லாம் கூடிக்கொண்டு என்மீது பொறாமை கொண்டவர்களாய் என்னை உம்மிடத்துக்கு வரவொட்டாமலும், நான் வியாதியிருந்தேனென்றும் செத்துப்போனேனென்றும் பொய் பேசியிருக்கிறார்கள்; அவர்கள் வார்த்தைகளைத் தாங்கள் நம்பாமல் என்னைக்காப்பாற்றவேண்டுமென்று உரக்கக்கூவினான். அப்பொழுது அவ்வித்துவான்களிற் சிலர் சமீபத்திலிருந்து, அந்நேரத்தில் ஏதோ அவ்வரசனை வாழ்த்துகிறவர்கள்போல் உரக்கக்கூவி ஆசீர்வாத சுலோகங்களைப் படித்தார்கள். அப்படியிருந்தும் அவ்வரசன் அக்குரலோசையினால் இது நம்முடைய புலவன்கண்டத் தொனிபோலிருக்கிறதே என்ன? என்று விசாரித்தான். மறுபடியும் அப்புலவன் அவ்வரசன் கேட்கத் தன் சங்கதிகளை உரத்தவொலியுடன் சொல்லிக் கூப்பிட்டான். அப்போது அவ்வித்துவான்கள் அவ்வரசனைப்பார்த்து, ஓ மகாராஜாவே! அப்புலவர் இறந்து பிசாசமாய் இவ்வரசமரத்தின்மீதேறியிருக்கிறார்; அப்பிசாசின் வார்த்தையைக் கேட்கநீர் இங்கே எவ்வளவும் நில்லாதேயுமென்று அ

ப்பிசாச சம்பாஷணையின் பீடை பரிகாரமாக அவ்வரசனுக்கு விபூதி மந்திரித்துக்கொடுத்தார்கள். அதை அவ்வரசன் மெய்யென்று நம்பித் திரும்பிப்போய்விட்டான். அப்புறம் அப்புலவனுக்கு அவ்வரசனைச் சந்திக்கச் சமயம் நேரிடாமலே போய்விட்டது.

இப்படியே இராஜதரிசனம் கிடைக்கப்பெறாமல் மனவருத்தமடைந்த மற்றொரு பண்டிதர் லௌகிக தந்திரமும் அறிந்திருந்தாராகையால் தாம் கொண்ட கருத்தை முடித்துக்கொண்டு சுகமாய் விடுபோய்ச்சேர்ந்ததை விளக்கும் ஒருசரித்திரத்தை அடியில் விளக்குகிறோம்:—

ஒரு பண்டிதர் போஜராஜனைக்கண்டு பரிசுபெற நெடுநாளாக முயற்சிசெய்தும் அவருடையவறுமையைக்கண்டு அவரை ஒருபொருளெணமதியாதவர்களாய் வாயிற்காப்போர் உள்ளேவிடாமல் தடுத்துக்கொண்டேவந்தார்கள். அப்பண்டிதர் அதுகண்டு மனவருத்தத்தினால் தெய்வத்தைநொந்து ஓர் யுக்திசெய்தனர். அவருடைய ஊரிலிருந்த வெட்டியானுடைய கம்பளத்தை மேலே போட்டுக்கொண்டும், அவனைப்போலவே அரையிலும் தலையிலும் கந்தைத்துணிகளைச் சுற்றிக்கொண்டும், ஒரு ஓலையில் ஒரு செய்யுளை எழுதி அதைக்கையில் எடுத்துக்கொண்டும், போஜராஜனுடைய அரண்மனைவாயிற்படியண்டைவந்து நின்றுகொண்டு வாயிற்காப்போரைநோக்கி, மகாராஜாவுக்கு அதி ஆப்தராகிய ஒருவர் இறந்துபோய்விட்டார், அச்செய்தியை மகாராஜாவுக்கு நானே நேரில் அறிவிக்கவந்தேன் என்றார். இதைக்கேட்டமாத்திரத்தில் வாயிற்காப்போர் திடுக்கிட்டுப் பயந்து காலடி புட்டத்திற்படும்படி யோடிப் போஜராஜனிடத்தில் அந்தச்செய்தியைத் தெரிவித்தார்கள். இதுகேட்ட மாத்திரத்தில் அரசன் சரசரவென்று வாயிற்படியண்டை ஓடிவந்து வெட்டியான் வேஷம்போட்டுக்கொண்டிருந்த பண்டிதனைநோக்கி, என்ன சமாசாரம் கொண்டுவந்தாய்? விரைவில் கூறுக என்றபோது, அப்பண்டிதர் அழுதுகொண்டே கண்ணீரும் கம்பலையுமாய் மகாராஜன் கையில் ஓலையை நீட்டினார். அதில் அடியில்வருஞ் செய்யுள் எழுதியிருந்தது:—

“ஒருபாதிமால்கொள மற்றொருபாதி யுமையவள்கொண்
டிருபாதியாலு மிறந்தான்புராரி யிருநதியோ
பெருவாரிதியிற்பிறைவானிற் சர்ப்பம்பிலத்திற்கற்ப
தருவானபோஜகொடையுன்கை யோடென்கை தந்தனனே.”

கற்பகதருவையொத்த போஜராஜனே! (பரமசிவம் இடப்பாகத்தில் பார்வதிதேவியாரையும் வலப்பாகத்தில் விஷ்ணுமூர்த்தியையும் வைத்துக்கொண்டிருக்கிறாரென்னும் புராண சித்தாந்தக்கருத்தை யநுசரித்து) சிவ பெருமானுக்குள்ள இருபுறங்களுக்குள்ளே ஒருபுறத்தைத் திருமாலும் மற்றொருபுறத்தை உமாதேவியாரும் பங்கிட்டுக்கொண்டனராதலின் அவ்விருபுறமும் போய்விட்டபடியால் (வேடிக்கையார்த்தமாகச்) சிவபெருமான் இறந்தாரென்றும், அவரிடத்திருந்த பொருள்களுக்குள்ளே சடாபாரத்திலிருந்த கங்கை சமுத்திரத்திற் சேர்ந்த

தென்றும், இளம்பிறைச் சந்திரன் ஆகாயத்திற் சேர்ந்ததென்றும், அவர் ஆபரணமாய்த் தரித்துக்கொண்டிருந்த சர்ப்பங்கள் குகைகளிற் சேர்ந்தனவென்றும், அவரது தயாளத்துவ குணத்தை உன்னிடத்திலும், பிட்சாபாத்திரத்தை என் கையிலும்கொடுத்தாரென்றும் பொருள்தரும் அச்செய்யுளைப் போஜராஜன் வாசித்துப்பார்த்த மாத்திரத்தில் ஆனந்தபரவசனாகி அப்பண்டிதருடைய கல்வித்திறத்தையும் புத்திகோசரத்தையும் சமயோசித யுக்தியையும் பிரம்பவியந்து, வறுமை மேலீட்டினால் அவருக்குக் கடவுளினிடத்திருந்த மஹா துக்கம் இப்படிப்பட்டதென்பதை நன்றாயறிந்து அவருக்கு வேண்டியவரையில் சன்மானஞ்செய்து வறுமையை யொழித்தனன்.

ஆகவே கல்வியறிவோடுகூட லௌகிகதந்திரம், சமயோசிதயுக்தி ஆகிய இவைகளும் ஒருவருக்குத் தெரிந்திருப்பது பெருஞ்சம்பத்தாகும்.

தெய்வீகக்கவிவாணர்களின் குணவிசேஷம்.

(தொடர்ச்சி.)

தெய்வீகக்கவிவாணர்கள் இப்பரதகண்டத்திலே அனேகரிருந்து அளவிறந்த அற்புதங்கள் செய்தாரேனும் அவர்களுடைய சரித்திரம் முழுதும் சரியாய்த் தெரியாமையினாலே சிலரைப்பற்றிய சரித்திரத்திலுள்ள தெய்வீகமான பாகங்களைமாத்திரம் இதுவரையில் எடுத்துக்காட்டினோம். தெய்வீகக் கவிவாணர்களுக்குள்ளே ஒருவராக எண்ணப்படத்தக்க அந்தகக்கவிவீரராகவ முதலியாரைப்பற்றிய சில அற்புதங்களை எடுத்துக்கூறி இம்மட்டில் இந்த விஷயத்தை முடிவுசெய்கிறோம்.

காஞ்சிபுரத்தைச்சேர்ந்த களத்தூர் என்னும் கிராமத்திலிருந்த வீரராகவமுதலியார் என்பவர் பிறவியந்தகர். இவர் குழந்தைப்பருவத்திலே அதிக புத்தி தீட்சண்யமுடையவரெனத் தெரியவந்தபடியால் இவரை ஈன்றதாயார் தன்வீட்டுக்கு எதிரிலிருந்த ஒருஉபாத்தியாயரிடத்திற்போய், ஐயா! என் குருட்டுப்பிள்ளைக்குக் கல்விகற்பிக்கவேண்டுமென்று குறையிரக்க, அதுகேட்ட உபாத்தியாயர்-அம்மா! உன் குழந்தைக்குக் குருட்டுத்தன்மை நீங்கிக் கண்விளக்கமானாலொழிய அவனுக்குக் கல்விகற்பிக்க யாவரால்தான் முடியும்? அவ்வாசையைவிட்டுவிடென்றுகூறினார். அதுகேட்டு அம்மங்கையர்க்கரசி மிகவும் துக்கித்துத் தன் அருமைப்புதல்வனை, அவ்வுபாத்தியாயருடைய பள்ளிக்கூடத்திற்கு எதிர்வீடாகிய தன் வீட்டுத்திண்ணையில் நாடோறும் உட்காரவைத்துவந்தாள். அன்றுதொடங்கி, அக்குமாரன் தனக்குக் கட்புலனில்லாமையால் எழுத்துகளின் உருவம் தனக்குப் புலப்படாமையுன்னி எதிர்வீட்டுத்திண்ணையில் சிறுவர்கள் வாசித்துக்கொண்டுவந்த

போது ஓசைமாத்திரத்தில் எழுத்துகளின் வரிசையை முன்னருணர்
ந்து பிறகு அப்பிள்ளைகளிற் சிலரை நேசமாக்கிக்கொண்டு அவர்களை
உபாத்தியாயரில்லாதகாலங்களில் தன்முதுகில் ஒவ்வோரெழுத்தா
யெழுதச்சொல்லி, அப்படி எழுதும்போது ஸ்பரிச உணர்ச்சியால்
அவ்வெழுத்துகளின் உருவங்களை மனதிற்பதித்துக்கொண்டு, அதன்
பிறகு அவ்வெழுத்துகள் ஒன்றோடொன்று கூடியபோதுண்டாகும்
உச்சரிப்பை நன்றாய்த்தெளிந்து, இப்படியே படிப்படியாய்ப் போது
மானவரையில் இலக்கண இலக்கியப்பயிற்சியிற்றேறி வந்தது. இப்
படியிருக்க, ஒருநாள் உபாத்தியாயரில்லாத காலத்திலே அவ்வந்தகக்
குழந்தை அப்பிள்ளைகளுடையபாடத்திற்பிழையிருக்கக்கண்டு அதைத்
திருத்திச் சரியாய்ச்சொல்லிக்கொடுக்க, அவ்வாறு படித்துக்கொண்டி
ருந்த அப்பிள்ளைகளை உபாத்தியாயர் அழைத்துத், தான் முன்னமே
சொல்லிக்கொடுத்துப்போயிருந்த பாடத்திற்குமாறாய் அவர்கள் சொ
ல்வதைக்கண்டு, அப்பிள்ளைகளைத் தண்டிக்கத் தொடங்குகையில், இவ்
வந்தகப்பிள்ளை - ஐயா! தேவரீர் அப்பிள்ளைகளைத் தண்டிக்கவேண்டா
ம், அடியேன்தான் அவ்வாறுசொல்லக் கற்பித்தேன், அதனது இலக்
கணம் இப்படிப்பட்டது என்றுரைத்தது. அதுகேட்ட அவ்வுபாத்தி
யாயர் என்றுமடையாத ஆச்சரியமடைந்து, அடடா நாம் இதுவரை
யில் இவ்வந்தகப்பிள்ளைக்கு எழுத்தே தெரியாதென்றல்லவோ நினைத்
தோம்! இப்போது பார்க்கையில் இலக்கண இலக்கியங்களில் அதிவல்
லபமுடையதாகவல்லவோ விளங்குகின்றது! இதேது! தெய்வீகப்
பிள்ளையாயிருக்கிறதென்று உடனே அப்பிள்ளையின் தாயாகிய மாது
சிரோன்மணியை அழைப்பித்து, அம்மா! உன் எண்ணம் பூர்த்தியா
ய்விட்டது, இனி இந்தப்பிள்ளை வாசிக்கவேண்டிய அவசியமில்லை,
இப்பிள்ளைக்குத் தெய்விகத்தன்மை வாய்த்திருக்கின்றது, ஐயோ! இ
தனருமையை நான் முன்னே அறியாமல் அலட்சியஞ்செய்தேன், இ
க்கற்றவருக்குத் தெய்வசேகரனென்னும் நாமத்தை இக்குழந்தையி
னிடமாகப்பலித்தது, இப்பிள்ளையைச் சாதாரணபிள்ளைகளைப்போல்
நினைக்கவேண்டாமென்று சொல்லி அவளுடன் கூட்டி அனுப்பிவிட்ட
னர். அதுமுதல் அவ்வந்தகப்பிள்ளை எப்படிப்பட்ட அரிய நூல்களை
யும் ஒருவர் வாசித்தவுடன் பொருள் தெரிந்துகொண்டு போதிக்குந்
தன்மை அடையப்பெற்றது. இப்படி சிலகாலஞ்சென்றபிறகு அ
வர் அந்நியதேச சஞ்சாரஞ்செய்ய அவாக்கொண்டனர். அப்போது ம
ணமுடிக்கத்தக்க பருவமாயிருந்தபடியால் அவரது தாயார் தங்கள் கு
லத்தில் ஒரு பெண்ணைப்பார்த்து விவாகம் செய்துமுடித்தனர். சில
காலஞ்சென்றபிறகு அவரது தாயாராகிய அப்பெண்கனியும் தேகவி
யோகமாயினர். உடனே அவ்வந்தகக் கவிவீரராகவமுதலியார் தன் தா
ய்க்குத் தான்செய்யவேண்டிய ஈமக் கடன்களைச்செய்துமுடித்து, அது
வரையில் தன்னிடத்தில் கற்ற மாணாக்கர்களில் இருவரை அழைத்துக்
கொண்டு தனது பத்தினியாருடன் சேலம் என்னும் ஊருக்குச்சென்

று அங்கு ஓர்வீட்டில் பத்தினியாரைநிறுத்தித் தான்மாத்திரம் தனது மாணாக்கருடன், அங்கு அக்காலத்தில் அரசுசெய்திருந்த சோழவம்சத்தரசனொருவன் சமுகத்திற்போய், தான் அந்தகராயிருப்பதால் சதா நடப்பதற்குப் பலவிதசங்கடங்கள் நேரிடுகிறதென்று, அச்சங்கடங்களை நிவர்த்தித்துக்கொள்ள எண்ணங்கொண்டு ஒரு குதிரை கொடுக்கவேண்டுமென்னுங் கருத்தையடக்கி அடியில்வரும் சீட்டுக்கவியைச் சொன்னார்:—

“ஏடாயிரங்கோடியெழுதாமல்தன்முதுகிலெழுதிப்படித்தவிரகன்
இமசேதுபரியந்தமெதிரிலாக்கவிவீரராகவன்விடுக்குமோலை
சேடாதிபன்சிரமசைத்திடும்புகழ்பெற்றதிரிபதகைகுலசேகரன்
தென்பாலைசேலம்புரந்தரசுசெய்திடும்செழியனெதிர்கொண்டுகாண்க
பாடாதகந்தருவமெறியாதகந்துகம்பற்றிக்கொலாதகோணம்
பறவாதகொக்கனற்பண்ணாதகோடைவெம்படையிற்றொடாதகுந்தம்
சூடாதபாடலம்பூவாதமாவொடுதொடுத்துமுடியாதசடிலஞ்
சொன்னசொற் சொல்லாதகிள்ளையொன்றெங்குந் துதிக்க வரல்விடவேண்டுமே.

(இப்பாடலில் கந்தருவம்-கந்துகம்-கோணம்-கொக்கு-கோடை-குந்தம்-பாடலம்-மா-சடிலம்-கிள்ளை என்னும் இப்பத்தும்குதிரையின்பெயர்) இதுகேட்ட அவ்வரசன் இவரது அந்தகத்தன்மையையும் கவிதாசாமர்த்தியத்தையுங் கண்டு மிகவும் வியந்து இவர்மஹாதெய்விகக்கவிவாணராயிருப்பதால் இவரது மனங்கோணாதபடி நடந்துகொள்ளவேண்டுமென்றெண்ணித் தன்னிடத்திலுள்ள குதிரைகளிலெல்லாம் மிகச்சிறந்ததாய் மல்லகதி மயூரகதி முதலிய பஞ்ச கதிகளோடுஞ் செல்லத்தக்க பஞ்சகல்யாணிக் குதிரையொன்றுபரிசளித்தனன். அதுபெற்று அம்முதலியார் அன்றுமுதல் அதன்மீதேறிச் சஞ்சரித்தனர். இவ்வாறிருக்கையில் அக்கவிராயர் சிலநாள்சென்றபின் வேறோர் அரசன் நல்ல தாதாவாய் வித்வான்களுக்கு வேண்டியபடி பரிசளித்து வருகின்றனென்று கேள்வியுற்று அவ்வரசன் சமுகத்திற்சென்றனர். அச்சமுகத்திலுள்ளவர்கள் யாவரும் இவரது வரவைக் கண்டவுடனெழுந்து எதிர்கொண்டழைத்துச்சென்று சிறந்த ஆசனத்திலிருக்கச்செய்து அரண்மனைக்குள்ளிருந்த அரசனைக்கண்டுதொழுது நின்று, மன்னரேறே! தங்கள் சமுகத்தில் அந்தகக் கவிவீரராகவ முதலியாரென்னும் தெய்விகக் கவிவாணரெழுந்தருளினர், அவரது மகத்துவம் மிகவுண்டு, ஆதலால் நீர் அவரைக்கண்டு தக்க மரியாதைசெய்தனுப்பவேண்டுமென்று கூறினர். அப்போது அவ்வரசன் தன் புத்திரி கொண்டிருக்கும் மயக்கத்திற்கும், தான் வளர்த்த கிளிகள் வழக்கத்தைப்போல் கூட்டைவிட்டு வாராமைக்கும் காரணம் தெரியாமல் மயங்கிக்கொண்டிருந்த தருணமாதலின், உடனே தன் சமுகத்துக்குவந்து சமுகவித்வான்களை நோக்கி, புலவர்களே! என் கருத்திலிருக்கும் சந்தேகந்தீரத்தக்கதாக ஓர் விருத்தப்பாசொல்லுங்கள் பார்ப்போம் என்று கூறினன். அதுகேட்ட வித்வான்கள்யாவரும் ஒன்றுந்தோன்றாமல் திகைத்துநிற்கையில், இவ்

வந்தகக் கவிவீரராகவமுதலியாருக்குத் தெய்விகவிளக்கத்தினால் அவ்வரசன் மனதிலுள்ள இரண்டுவித சந்தேகமும் விளங்க, அவ்வரசன் கேட்டுக்கொண்டவாறே அவற்றை ஓர் விருத்தத்திலடக்கி அடியில் வருமாறு கூறினார்:—

“ வடவைக்கனலைப்பிழிந்துகொண்டுமெற்றுமொருகால்வடித்தெடுத்து
வாடைத்துருத்திவைத்தூதிமறுகக்காய்ச்சிக்குழம்புசெய்து
புடவிக்கயவர்தமைப்பாடிப்பரிசுபெறாமற்றிரும்பிவரும்
புலவர்மனம்போற்சுடுநெருப்பைப்புழுகென்றிறைத்தாற்பொறுப்பாளோ
வடவிக்கதலிப்பசுங்குருத்தைநச்சுக்குழலென்றஞ்சியஞ்சி
யஞ்சொற்கிளிகள்பஞ்சரம்விட்டகலாநிற்குமகளங்கா
திடமுக்கடவாரணமுகைத்ததேவேதேவசிங்கமே
திக்குவிசயஞ்செலுத்திவருசெங்கோனடாத்துமெங்கோனே.”

என்று அவ்வரசன் மகள் கொண்டிருந்த காம மயக்கத்தினால் அவளுக்குப்பூசிய கலவைப்பூச்சுகள் பொறுக்கக்கூடாமல் தகிக்கின்றனவென்றும், அவ்வரசன் வளர்த்துவந்த கிளிகளின்கூடுகள் இருந்த இடத்திற்குச்சமீபத்திலுள்ளவாழைகளில் குருத்துகள் தோன்றி அவைகளின் தோற்றம் துப்பாக்கியைப்போலிருத்தலின் அதுகண்ட கிளிகள் பயந்து கூட்டைவிட்டு வெளியேவாராமலிருக்கின்றனவென்றும் பொருள்படுகின்ற இப்பாடலைக்கேட்டவுடனே அவ்வரசன் மனதிலிருந்த இரண்டுவித சந்தேகங்களுந் தெளியப்பெற்று, இவர் தெய்விகக்கவிவாணரென்றே நிச்சயித்து, இன்னுமொருசோதனை செய்யலாமென்றெண்ணி, அச்சமுகத்தினின்றும் பெயர்ந்து உள்ளேசென்று ஸ்ரீராமரைப்போல் வேடந் தரித்துக்கொண்டு அவ்வந்தகக் கவிவீரராகவர்க்கெதிரேவந்துநின்று, ஐயா! கவிராயரே! அடியேன் இப்போதிருக்குங் கோலத்தைக்குறித்து ஓர்வெண்பாவினாவாக முடிக்கவேண்டுமென்று சொன்னார். அதுகேட்ட அந்தகக்கவிவீரராகவமுதலியார் தெய்வாநுக்கிரகத்தினால் அவ்வரசன் அப்போதிருந்தகோலம் ஸ்ரீராமபிரானுடைய கோலமென்று தெரிந்துகொண்டு, இராவணனைக்கொல்லவும் மாயமானைப்போக்கவும் மராமரத்தைத்துளைக்கவும் சேதுபந்தனஞ் செய்யவுமல்லவோ இராமர் அவதரித்தது? அப்படிப்பட்ட ஏதுக்கள் இப்போதொன்றுமில்லையே, இல்லாதிருக்கவும் நீ வில்லேந்தி ஸ்ரீராமர் கோலந்தரித்தது எதற்காக? என்னுங் கருத்தையடக்கி,

“ வாழுமிலங்கைக்கோமானில்லைமானில்லை
யேழுமராமரமோவீங்கில்லை—யாழி
யலையடைத்தசெங்கையபிராமாவின்று
சிலையெடுத்தவாறெமக்குச்செப்பு.”

என்றவெண்பாவைச் சொல்லிமுடித்தார். அதுகேட்ட அவ்வரசன் பெருமகிழ்ச்சியெய்தி அவரது தெய்விகத்தன்மையைச் சோதித்ததற்காக மிகவும் பயந்து நடுநடுங்கி அச்சத்துடன் அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாக வணங்கி எதிரில்நின்று, புலவர் பெருமானே! தெய்விகக்கவிச்சிங்கமே! அடியேனியற்றிய அபராதத்தைப்பொறுத்தரு

ன்விரென்று பலவாறு தோத்திரஞ்செய்து அவருக்கு வேண்டியபரிசுகள் விபவமாகக்கொடுத்தனுப்பினன்.

சிலகாலஞ்சென்றபின்பு அக்கவிராயர் திருநெல்வேலியில் வாழ்ந்திருந்த இராமன் என்னும் வள்ளலைப்போய்க்கண்டபோது அவ்வள்ளல் இவரது தெய்விகத்தன்மையைப்பலராலும்பல்காலுங்கேள்விப்பட்டுள்ளவனாதலால் இவரைக்கண்டவுடனெதிர்கொண்டழைத்துச்சென்று ஆசனத்திலிருக்கச்செய்து தன்னிடத்திலுள்ள யானைகளிலொன்றைப்பரிசாகத்தந்தனர். அதைப்பெற்றுக்கொண்டுவந்தவுடன் அவரதுபத்தினியார், வெளியேபோய் அப்பிரபுவைக்கண்டதிலென்ன பரிசுபெற்றுவந்தீரென்றுகேட்க, அதற்கு யானையைப்பரிசாய்ப் பெற்றுவந்தேனென்றுசொல்வதற்காகச் சாதுரியமாய் யானைக்குள்ளபெயர்களையொவ்வொன்றாகச் சொல்லிவந்ததாகக் கூறியதை இதனடியில்வரும் விருத்தத்தாற்காணலாம்:—

“ இம்பர்வானெல்லையிராமனையேபாடி
    யென்கொணர்ந்தாய்பாணநீயென்றாள்பாணி
வம்புலாங்களபமென்றேன் பூசுமென்றாள்
    மாதங்கமென்றேன்யாம்வாழ்ந்தேமென்றாள்
பம்புசீர்வேழமென்றேன் றின்னுமென்றாள்
    பகடென்றேனுழுமென்றாள்பழனந்தன்னைக்
கம்பமாவென்றேனற்களியாமென்றாள்
    கைம்மாவென்றேன் சும்மாகலங்கினாளே.”

(யானைக்குரியபெயர்களாகிய - களபம் - மாதங்கம் - வேழம் - பகடு - கம்பமா - கைம்மா என்னும் சொற்களை இவருரைத்தமாத்திரத்தில் இம்மொழிகளுக்குள் ஒவ்வொன்றும் பலபொருள்தரும் ஒருமொழியாகையால் அவற்றை முறையேகவிராயருடைய மனைவியார் பூச்சு - சிறந்தபொன் - கரும்பு - எருது - கம்பின்மா - கையிலிருக்கும்மா என்று பொருள்கொண்டதாகக் கற்பித்து இப்பாடல் கூறியதாகக்கொள்ளவேண்டும்) பிறகு அந்த யானையை அழைத்துக்கொண்டுவந்த கவிவீரராகவமுதலியார் இந்த யானையை நாமெவ்வாறுகாப்பாற்றுவதென்று யோசித்து, வறுமையால்துன்பமடைந்து ஆகாரத்திற்குவழியில்லாமற்போயிருந்தவெனக்கு உடுக்க வஸ்திரமும் உண்ணச்சோறும் கொடுக்காமல், ஒருவாய்க்கே இரைதேடி அலையுமெனக்கு அவ்வள்ளல் (நால்வாய்)யானையைக் கொடுத்தானே,இனி என்னுடைய சொந்தவாய் ஒன்றுக்கும் இந்த நால்வாய்க்கும் எங்கு இரை தேடுவேனென்னுங் கருத்தை யடக்கி,

“ இல்லெனுஞ்சொல்லறியாதநெல்லையில்வாழ்ராமனைப்போயாழ்ப்பாணன்யா
பல்லையிளித்திரந்தக்கால்வெண்சோறும் பழந்தூசம்பாலியாமற் [ன்
கொல்லவினைத்தேதனதுநால்வாயைப்பரிசாகக்கொடுத்தான்பார்க்குள்
தொல்லையெனதொருவாய்க்கு நால்வாய்க்குமிரையெங்கேதுரப்புவேனே.”

என்றுபாடி அப்பிரபுவிற்கனுப்ப உடனே அவ்வள்ளல் அந்தயானையைப் பாதுகாக்கத்தக்க திரவியமும் கொடுக்கவேற்றுக்கொண்டனர்,

இவ்வாறுபலவித அற்புதங்களை விளைத்திருந்தது மல்லாமல் திருக்கழுக்குன்றப்புராணம், திருக்கழுக்குன்றமாலையென்னும் நூல்களையும் அதிக விற்பனவிளக்கம்பொருந்திய கற்பனைக் கவிகளாற்பாடியருளிச்சிலகாலம்வசித்திருந்து தேகவியோகமாயினர். இவரதுமரபினர் இக்காலத்தும் அக்களத்தூரில்வசிக்கின்றனர். இவர்தேகவியோகமானபோது அங்கிருந்தசில வித்வான்கள் பாடியபாடல்களில் இரண்டுபாடல்களை இதனடியிற்காட்டுகின்றோம்:—

"இன்னங்கலைமகள்கைமீதிற்புத்தகமேந்தியந்தப்
பொன்னம்புயத்தினிற்புக்கிருந்தாளென்னபுண்ணியமோ
கன்னன்களந்தைக்கவிவீரராகவன்கச்சியிலே
தன்னெஞ்சமேடெனக்கற்றுனெருமுத்தமிழையுமே."

"முன்னாட்டுத்தவமுனியுஞ்சேடனும்வான்மீகனுமுன்முன்னில்லாமற்
றென்னாட்டுமலையிடத்தும்பாரிடத்தும்புற்றிடத்தும்சென்றுசேர்ந்தா
ரின்னாட்டுப்புலவருனக்கெதிரிலையேகவிவீரராகவாநீ
பொன்னாட்டுப்புலவருடன்வாதுசெய்யப்போயினையோபுகலுவாயே."

சப்தமும் அதன் விசித்திரங்களும்.

சப்தம் என்பது பொருள்கள் ஒன்றோடொன்று தாக்குவதனாலுண்டாகும் ஓர்வகைக்குணமாயிருக்கிறது. இவ்வாறு ஒன்றோடொன்று தாக்கும்பொருள்கள் பரமாணுரூபமாயிருந்தாலுஞ்சரி பெருத்த பொருள்களாயிருந்தாலுஞ்சரி சப்தம் அவற்றின் காரியசித்தியாயிருக்கின்றது. பதார்த்தத்தின் குணாகுணங்களைச் சப்தரூபமாக நமக்குத்தெரிவிப்பது இடையிலுள்ள நிற்சலனவாயுவேயாம். ஒரு அறைக்குள்ளிருக்கும் வாயுமுழுவதையும் வாயுவாங்கி என்னும் சூத்திரக்கருவியைக்கொண்டு வெளிப்படுத்திவிட்டு அவ்வறைக்குள்ளே ஒருமணியைக்கட்டி வெளியினின்றும் அதையடிப்பதற்கேற்ற ஏற்பாடு செய்வோமாயின், அம்மணியோசை வெளியிலுள்ள நமக்கு எவ்வளவும்கேட்காது. இதுபோன்ற பலசோதனைகளினாலே ஓசைக்கு வாயு அத்தியாவசியமென்று தெரியவருகிறது. வாயுமூலமாக ஓசை எவ்வளவு வேகமாகச்செல்கின்றதோ சற்றேறக்குறைய அவ்வளவு வேகமாகவே ஜலத்தின் மூலமாகவும் அதுபோகின்றது.

யாதொருவஸ்து ஓசைசெய்யும்போது அதனிடத்துள்ள அணுக்கள் முன்னும்பின்னுமாக அதிதீவிரமாய் அசைந்து ஒன்றோடொன்று தாக்குகின்றன. தப்பட்டைமுதலியதோற் கருவிகளும், நாகசுரம் முதலிய தொளைக்கருவிகளும், வீணை முதலிய நரம்புக்கருவிகளும், மணி தாளம் முதலிய கஞ்ச (வெண்கலம்) க்கருவிகளும் ஓசைசெய்யும்போது அவற்றின் அணுக்கள் மேற்சொன்னபடியே ஒன்றோடொன்றுதாக்குகின்றன. நாம் பாடும்போது நம்முடைய கண்டத்தின் உட்புறத்தி

ளுள்ள தொனி நரம்புகள் மேற்கண்டகருவிகளைப்போலவே இயங்குகின்றன. பதார்த்தங்களின் அணுக்கள் ஒன்றோடொன்று தாக்கியியங்கும்போது அவற்றை நாற்புறமும் சூழ்ந்துள்ள வாயுவின் அணுக்களும் அவைகளினால் தாக்குண்டு அவ்வாறே இயங்குகின்றன. வாயுவின் அணுக்கள் இவ்வாறு ஒன்றோடொன்று தாக்கி இயங்குவதனால், மற்றொரு புறத்திலுள்ள வேறொரு பதார்த்தத்தின் அணுக்களும் அந்த முதற்பதார்த்தத்தின் அணுக்கள் இயங்குவதுபோலவே இயங்கி ஓசைசெய்கின்றன. தூரத்தில் ஒருவஸ்துவினாலுண்டாகும் ஓசையின் அதிர்ச்சியினாலேயே மணி, கண்ணாடி, தொட்டி, வாத்தியக்கருவி முதலியவைகள் ஓசைசெய்வதை நாம் பிரத்தியட்சமாகக் கண்டிருக்கின்றோம். இதற்குக்காரணம்யாது? தூரத்திலுள்ள பதார்த்தத்தின் அணுக்களினுடைய இயக்கத்தினாலே இடையிலுள்ள வாயுவின் அணுக்கள் அவ்வாறே இயங்கி மற்றொருபுறத்திலுள்ள மணி கண்ணாடி முதலிய பதார்த்தங்களின் அணுக்களைத்தாக்குகின்றபடியால் அம்மணி முதலிய கருவிகளின் அணுக்களும் அவ்வாறே இயங்கி ஓசைசெய்கின்றன. ஓசை சாதாரணமாய் ஒருவினாடியில் 1142 அடி செல்லுகின்றதென்று பலசோதனைகளினால் வாயுதத்துவசாஸ்திரிகள் நிச்சயித்திருக்கின்றார்கள். ஓசை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப்போக நாழிகையாகிறதென்னும் விஷயமே அனேகருக்குத்தெரியாது. இது ஒருவேளை அவர்களுக்கு ஆச்சரியமாகத்தோன்றும். இரவில் குண்டுபோடும்போது சற்றே நிதானித்துப்பார்ப்போமாகில் இவ்விஷயம்நமக்கு நன்றாய்ப் புலப்படும். குண்டின்சப்தம் நமக்குக்கேட்பதற்கு இரண்டொரு வினாடிக்குமுன்னே ஓர்வகை வெளிச்சம் மின்னலைப்போல் நம்கண்ணுக்குத் தோன்றுகிறதல்லவா? அவ்வெளிச்சம் தோன்றுகிற அக்ஷணமேதான் குண்டினாலாகிய ஓசைஉண்டாகிறது. ஆனால் குண்டுபோடும் இடத்திலிருந்து அவ்வோசை நம்முடைய செவிக்கு எட்ட இரண்டொரு வினாடிபிடிக்கிறது. இதுபோன்ற பிரமாணங்களினாலே ஓசை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப்போகச் சிறிதுகாலம்பிடிக்கிறதென்று நாம் நிராட்சேபமாய்த் தெரிந்துகொள்ளலாம். ஓசையின் வேகத்வம் நமக்குத்தெரிந்திருப்பது அனேக காரியங்களுக்குமிகவும் அநுகூலமாயிருக்கிறது. நெடுந்தூரத்தில் ஒருகப்பல் வந்துகொண்டிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அக்கப்பல்வருகிற இடத்திற்கும் நாமிருக்குமிடத்திற்கும் இவ்வளவுதூரமிருக்கிறதென்பதை ஓசையினாலேயே நாம் அறிந்துகொள்ளக்கூடும். எப்படியெனில் ஒரு குண்டுபோடும்படியாக அக்கப்பலிலுள்ளவர்களுக்கு நாம் இங்கிருந்து குறி காட்டுவோமானால் அவர்கள் குண்டுபோடுவார்களல்லவா? அப்போது அக்குண்டின் ஓசைக்குமுன்னே யுண்டாகும் மின்னலைப்போன்ற வெளிச்சந்தோன்றுங் காலத்திற்கும் அக்குண்டின்ஓசை நம்முடையசெவிக்குக் கேட்குங்காலத்திற்கும் இடையில்செல்லும் காலஅளவைக்கொண்டு கப்பலுக்கும் நமக்கும் இவ்வளவுதூரமிருக்கிறதென்று நிச்சயித்துக்கொள்ளலாம்.

இவ்வாறே பெரியபர்வதங்களின் உயரத்தையும் ஆகாசபாண முதலியவற்றின் ஓசையைக்கொண்டு சாஸ்திரிகள் நிச்சயித்துக்கொள்கின்றார்கள்.

யாதொருபொருள் ஓசைசெய்யும்போது அதன் அணுக்கள் அசைந்து ஒன்றோடொன்று தாக்குவதனால் அதை அடுத்துள்ளவாயுவின் அணுக்களும் அவ்வாறே இயங்கி அவ்வோசையை வேறொருபதார்த்தத்திற்கு எட்டும்படியாகப்பண்ணும்போது அவ்விரண்டாவதுபதார்த்தம் ஓசையுண்டாக்கக்கூடியதல்லாத திண்ணியகற்பாறை முதலியபொருளாயிருக்குமாயின் அப்போது அவ்வோசை அதனிடத்திருந்து முன்சென்றவழியாகவே திரும்பும். இவ்வாறு திரும்பும் ஒலிக்குமாறொலியென்றும் எதிரொலியென்றும் பெயர். இவ்வகையான ஒலி பெரும்பாலும் மலைச்சாரல்களிலும் குகைகளிலும் உட்கவிந்து வளைந்துள்ளசுவர்களமையப்பெற்றகட்டடங்களிலும் உண்டாவதை நாம் பிரத்தியட்சமாகக்காணலாம். ஒளியை எவ்வாறு நாற்புறமும் சிதறுண்டுபோகாதபடி ஓரிடத்திற்கொண்டுவந்து அமைக்கலாமோ அவ்வாறே சப்தத்தையும் நாற்புறமும் பரவிவிண்பட்டுப்போகாதபடி ஓரிடத்திற்கொண்டுவந்து அமைக்கலாம். வெய்யிலில் ஒருபஞ்சை இன்றைக்கெல்லாம் காட்டினபோதிலும் அது பற்றிஎரியத்தக்க அவ்வளவு உஷ்ணம் அதனிடத்துத்தாக்காது. ஓர்வகைக்கண்ணாடிக்கருவியினால் அவ்வொளியை ஓரிடத்து அமையும்படிபண்ணுவோமாகில் அவ்வாறு ஒளித்திரள்கூடிவிழும் மையத்திலே அப்பஞ்சையாவது வேறுபொருளையாவது காட்டியமாத்திரத்தில் அது குப் என்றுபற்றிக்கொள்ளும். சப்தத்தையும் இவ்வாறே மையமான ஓரிடத்திற்கொண்டுவந்து அமைப்போமாகில் அது பெரும்பயனைத்தரத்தக்கதாயிருக்கும். சீர்மை முதலிய இடங்களில் கெடிகோம் அனேக ஜனங்கள் கேட்கும்படி பிரசங்கிக்கவேண்டியவர்களுக்கு அநுகூலமாகச் சிலகட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் உபந்நியாசகர் இருந்து பிரசங்கிக்குமிடத்திலிருந்துவரும் ஓசை எவ்வளவும் வீண்போகாதபடி எல்லோருடையசெவிகளுக்கும் நன்றாகக்கேட்குமாறு பிரசங்கமண்டபங்களமைக்கப்பட்டிருக்கின்றன. அம்மண்டபங்களிலே ஒருபுறத்திலிருந்து உபந்நியாசகர் பிரசங்கிப்பாராகில் அவர்பிரசங்கமுழுவதும் நெடுந்தூரத்தில் மற்றொருபுறத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் நன்றாய்க்கேட்கும். சப்தம் பிறக்கும்விதத்தைப்பற்றியும் அதுசெல்லும் தன்மையைப்பற்றியும் அதைப்பயன்படச்செய்துகொள்வதைப்பற்றியும் இம்மட்டில்சொல்லிமுடித்தோம். இனி சப்தபேதங்களை நாம் அறிந்துகொள்வதற்கு நமக்கு ஜகதீசரால் அளிக்கப்பட்டசெவிப்புலனது விசித்திரத்தையும் இவ்விஷயத்திற்குச் சம்பந்தப்படுகிறமட்டில் சிறிதெடுத்துக்காட்டுவோம்.

ஹக்ஸ்லி முதலிய ஆங்கிலேயதேசதத்துவசாஸ்திரிகள் மனிதனுடைய விந்தையான உருவமாகியசெவியை வெளிப்பாகம் என்றும் மத்தியபாகம் என்றும் உட்பாகம் என்றும் மூன்றுபாகங்களாக வகுத்திருக்

கின்றார்கள். வெளிப்பாகத்தை நாம் உற்றுப்பார்ப்போமாகில் அதில் சில பகுதிகள் வலம்புரிச்சங்குபோல் வலதுபக்கமாகச்சுழன்றும் மற்றும் சில பகுதிகள் இடம்புரிச்சங்குபோல் இடதுபக்கமாகச்சுழன்றும் சில பகுதிகள் முக்கோணங்கள்போல் அமைந்தும் மற்றும் சிலபாகங்கள் சுருங்கியும்விரிந்தும் இருப்பதைக்காணலாம். மொத்தத்தில் இவைகளெல்லாம் வெளியிலுள்ள ஓசையை உள்ளுக்குக்கொண்டுபோவதற்கு அநுகூலமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வெளிப்பாகத்தில் புழு பூச்சி காற்றுமுதலியவை நுழையாதபடி வாயிற்காப்போர்போல் சிறு உரோமங்களும் குறும்பியும் அதிதீவர ஸ்பரிசஉணர்ச்சியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வெளிப்பாகத்தின் உட்கடையில் பேரிகைபோன்ற ஓர்வகைஜவ்வு சுவர்வைத்ததுபோல் குறுக்கேயிருக்கிறது. செவியின்மத்தியபாகத்தில் சரீரத்திலுள்ள எல்லாஎலும்புகளினும் மிகவும் நுண்ணியமூவித எலும்புகள் மேற்படிஜவ்வைத்தொடர்ந்திருக்கின்றன. அம்மூவகைஎலும்புக்கும்முறையேசுத்திகையெலும்பென்றும் அடைகல்லெலும்பென்றும் சுவட்டெலும்பென்றும்பெயர். உட்பாகத்தில் சுழன்றுசுழன்று சிக்குமுக்காய் மூளையளவும் எட்டத்தக்க வளைகுழல் அறைகளிருக்கின்றன. செவியின் இவ்வுட்பாகத்திற்குள்ளிருக்கும் ஜவ்வெலும்பின்ஜலத்திலே மூளையிலிருந்துதொடர்ச்சியாய்வரும் சிரவணநரம்புக்கூந்தல்கள் பாசையைப்போல் படர்ந்து நீந்திக்கொண்டிருக்கும். செவியின் இம்மூன்றுபாகங்களின் அமைதியை யோசித்துப்பார்க்கையில் அவைகளெல்லாம் வெளிப்புறத்திலுள்ள ஓசையை ஆத்மாவின் ஸ்தானமாகிய மூளைக்குக்கொண்டுபோய்ச்சேர்ப்பதற்கு அநுகூலமாயிருக்கின்றனவென்று தெரியவருகிறது.

யாதொரு பதார்த்தத்திலுள்ள அணுக்கள் ஒன்றோடொன்றுதாக்கி அசைவதனால் ஓசைஉண்டாகிறதென்றல்லவோ முன்னே சொல்லியிருந்தோம்? அவ்வணுக்களின் அதிர்ச்சியினால் வாயுவின் அணுக்களும் அதிர்கின்றன அல்லவா? வாயுவின் அதிர்சசி செவியின்வெளிப்பாகத்திற்கும் மத்தியபாகத்திற்கும் இடையிலுள்ளபேரிகைபோன்ற ஜவ்வில்தாக்குகின்றது. வெளியிலுள்ளயாதொருபொருளின் அதிர்ச்சியை இடையிலுள்ளவாயு மேற்படிஜவ்வில்கொண்டுபோய்த் தாக்க அந்தஜவ்வானது தானடைந்த அதிர்ச்சிக்கு ஏற்றபடி தன்னைத்தொடர்ந்துள்ள சுத்திகையெலும்பை இயக்க, அவ்வெலும்பு தன்னை அடுத்துள்ள அடைகல்லெலும்பை அசைக்க, அவ்வடைகல்லெலும்பு தன்னைப்பற்றியுள்ள சுவட்டெலும்பைமோத, அச்சுவட்டெலும்புசெவியின் உட்புறத்தில் ஜவ்வெலும்பின்ஜலத்திலே மிதந்துகொண்டிருக்கிற சிரவணநரம்புக்கூந்தல்களைத் தாண்டுகின்றது. அந்நரம்புகள் அந்தந்த அதிர்ச்சிக்கு ஏற்றபடி அசைந்து ஓசைபேதத்தை ஆத்மாவின் ஸ்தானமாகியமூளைக்கு அதிவிசித்திரமாகப்புலப்படுத்துகின்றன. இவ்வளவு விசித்திரமும் மனதுக்கெட்டாத அதிநுட்பகால அளவுக்குள் நடந்தேறும்படியமைத்த பேரறிவாளராகிய கடவுளின்வரம்பிலாற்

றனுடைமையை என்னென்றுகூறுஞலும்! இவ்வளவு அற்புதமும் ஒருபேரறிவாளருடைய இயக்கமின்றிச் சுபாவத்திலேயே அமைந்துவிடுகிறதென்றுகூறுவோரதுமதியிருந்தவாறு என்னே ! என்னே !

ஓர்கரடியின்கதை.

16-ம் அத்தியாயம்.

ஒரு புதுஎஜமானன்.

விக்கிரமவீரன் மனத்திருப்தியடைந்து அதிகசந்தோஷமாயிருந்தது. மூப்பன்,கோலன் என்னும் இரண்டு விளையாட்டுத் தோழர்களுடன் சதா தன் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கலாமென்று அது விருப்பங்கொண்டிருந்தபோதினும் அதன் தலைவிதி வேறே மாதிரியாயிருந்தது.

ஒருநாள் அவ்வீட்டார் யாவரும் அக்கொட்டிலண்டை வந்தபோது அவ்வீட்டுக்குரியவனாகிய காடன் என்பவன் முன்னே அதனண்டைவந்து அதன் தலையைப் பலதடவை தடவித் தட்டிக்கொடுத்தான். இத்தனைபெயர் ஏககாலத்தில் ஒரேதுவாய வந்தார்கள்? இவர்கள் என்னசெய்யப்போகிறுர்கள்? என்று விக்கிரமவீரன் பிரமித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில், இரும்பினுல் செய்யப்பட்ட ஓர்வகை வாயுறையைக் காடன் விக்கிரமவீரனுடைய மூகத்தண்டை கொண்டுவந்து அதன் காதைக் கெட்டியாய்ப்பிடித்துக் கொண்டு அதன் வாயையும் மூக்கையும் அவ்வாயுறைக்குள் நுழைத்து, அதன் கழுத்திற் கட்டியிருந்த கண்டவலையத்தில்கொண்டுபோய் அதை மாட்டிவிட்டான்.

இந்தப்படி காடன்செய்ததை விக்கிரமவீரன் இது ஏதோ பரிகாசத்திற்காகச் செய்யப்பட்டிருக்கலாமென்று நினைத்து, மறுபடியும் அதை இவர்கள் எடுத்துவிடுவார்களென்று பொறுத்துக்கொண்டிருந்தும் அவ்வாயுறை அப்படியே மாட்டியிருப்பதுகண்டு, அது தன்கை நகங்களினுற் கீறியும் தன் தலையைச் சுவற்றில் தேய்த்தும் அவ்வுறையைக் கழற்றிவிட முயன்றது. அது அதிக பிகுவாய் மாட்டியிருந்தபடியால், நம்முயற்சி பயன்படாது, இன்னம் நமக்கு என்ன விளையப்போகிறதோ பார்ப்போமென்று தீர்மானித்து விக்கிரமவீரன் ஒரு புறத்தில் சும்மா இருந்தது.

அங்கிருந்தவர்களெல்லாம் விக்கிரமவீரனுடைய செய்கைகளைக் கவனித்துக்கொண்டே யிருந்தார்கள். அது சற்றுநேரம் அவஸ்தைப்பட்டுச் சும்மாவிருக்கத் தலைப்பட்டபிறகு காடனும் மூப்பனென்னும் சிறுபிள்ளையும் அதன் சமீபத்தில் வந்து “இவன் மெத்தநல்லவன்” என்றும். “ஐயோபாவம்!” என்றும் சொல்லிக்கொண்டே, அதன் கழுத்திற் பூட்டியிருந்த கண்டவலையத்தில் ஒரு பெரிய கயிற்றைக்கட்டினுர்கள்.

இவ்வாறு அவர்கள் கழுத்திற் கயிற்றைக் கட்டியபோது விக்கிரமவீரன் கடைசியாக நம்மை இவர்கள் கொல்லத்தான் போகிறுர்களென்று திகிலடைந்து கொண்டிருக்கையில், அவர்கள் தன்னை வெளியே முற்றத்தில் தாராளமாய்த் திரிய வொட்டுவதற்காக இந்தப்படி செய்தார்களென்று தனக்குத் தெரியவந்தபோது விக்கிரமவீரனுக் குண்டான பெருமகிழ்ச்சி இவ்வளவு அவ்வளவல்ல.

இப்போது வசந்தகாலமானபடியினுல் செடிசெட்டுகள் யாவும் ரமணீகரமாக நாற்புறமும் இருந்தபடியாலும், ஆகாயம் மாசுமறு வில்லாமல் வி

ஏங்கிக்கொண்டிருந்தபடியாலும் கயிற்றை எவ்வளவு நன்றாய்க் காடன் இழுத்துப் பிடித்தபோதிலும் விக்கிரமவீரன் துள்ளித்துள்ளி நாற்காற்பாய்ச் சவிட்டுக் குதித்துப் பேரானந்த பரவசமடைந்தது.

அதைப்பார்த்துக்கொண்டிருந்த சிறுவர்களும் மகிழ்ச்சியடைந்து அதனுடன் கூடவே ஓடி விளையாடினார்கள். வீரியும் சமீபத்திலிருந்துகொண்டு காடியின் உருவழகை நன்றாய்ப் பார்த்துப்பார்த்து அதிசயித்தாள்.

விக்கிரமவீரனுக்குப் போட்டிருந்த வாயுறை அதற்குப் பிரதமத்தில் அதிக சங்கடமாகவும் அசௌக்கியமாகவும் இருந்தபோதிலும் பழகப்பழக அதற்கு அது லட்சியமில்லாமற்போய்விட்டது. தன் எஜமானன் வாயுறையில்லாமல் தன்னைத்தனியே விட்டிருக்கப் பயப்படுகிறானென்று அது தெரிந்துகொண்டது. விக்கிரமவீரனுக்கு வாஸ்தவத்தில் அவ்வீட்டாரிடத்திலெல்லாம் அதிக விசுவாசமிருந்ததென்பது அவ்வீட்டிற் குடையவனாகிய காடனென்பவனுக்குத் தெரிந்துமாத்திரமிருக்குமாயின் அது கடித்துக் காயம்பண்ணுமென்று பயப்படுவதற்கிடமிராது.

பிறகு ஒவ்வொருதினமும் சாயரட்சைவேளையில் ஒருதடவை விக்கிரமவீரனை அவ்வீட்டார் வெளியே இந்தப்படி சற்றுநேரம் திரியவிடுவது வழக்கம். அச்சமயங்களில் தன் சாமர்த்தியத்தையெல்லாம் விக்கிரமவீரன் எல்லோருக்கும் காட்டிக்கொண்டிருந்ததுமன்றி நாடோறும் நூதனநூதனமாக அனேக விஷயங்களைக் கற்றுக்கொண்டும்வந்தது. ஓர் தடியையும் குடையையும் அது தூக்கிக்கொண்டுபோகும். இறந்துபோனதுபோலச் சிறிதுநேரம் படுத்துக்கொண்டிருக்கும். பிறகு எழுந்திருந்து வாயில் கொம்பைப்பிடித்துக்கொண்டு சுருட்டுப் பிடிப்பதுபோல் நடிக்கும். பீமனென்னுங் கிழவன் ஊதிக்கொண்டிருக்கும்போது விக்கிரமவீரன் பின்னங்காலால் குதித்துக்கொண்டிருப்பதைப் பார்க்க அச்சிறுபிள்ளைகள் அதிக சந்தோஷப்பட்டு வருவார்கள்.

இப்படியிருக்கையில் ஒருநாள் வாத்தியம்வாசிப்போனொருவன்விக்கிரமவீரனைப்பார்த்து அதன் சாமர்த்தியத்திற்காக மிகவும் மெச்சி அடிக்கடி அவ்விடத்தில் வந்துகொண்டிருந்ததுமன்றிக் காடனோடு சிலபேரங்கள்பேசிக்கொண்டுமிருந்தானாகையால் அவன் ஏதோ தனக்கு ஊறுவிளைக்கத்தக்க காரியத்தைச்செய்யப்போகிறானென்று விக்கிரமவீரன் தெரிந்துகொண்டது. பின்பு ஒருநாள்பகல் அதுபடுத்துத் தூங்கிக்கொண்டிருக்கையில்தன்மேல் சிலதினங்களாகக்கண்போட்டுக்கொண்டிருந்த வாத்தியக்காரனும் அவனோடுகூட இன்னும் அனேகரும் திடீரென்று அதன்கொட்டிலண்டைபோய்நின்றார்கள். அப்போது காடன் அதற்கு வாயுறையிட்டு வெளியே வெய்யலில்கொண்டுவந்து நிறுத்தினான். அப்போது அங்குவந்திருந்தவர்கள் அதை முன்னும்பின்னுமாக இழுத்து நன்றாய்ப்பரிட்சித்து அதன் வாயைத்திறந்து அதன் தந்தங்களைச் சோதித்துக்கொண்டிருக்கையில் விக்கிரமவீரன் தான் பொறுமையோடு சந்தோஷக் குறிகாட்டிக்கொண்டிருந்தால் அச்சிறுபிள்ளைகளை மகிழ்விப்பதுமன்றித்தானும் தப்பிப் பிழைக்கலாமென்று கருதி முகமலர்ச்சியோடு பொறுத்துக்கொண்டிருந்தது. ஆனால் வெகுசீக்கிரம் அவ்வீட்டையும் தன்தோழர்களாகிய சிறுபிள்ளைகளையும் தான் நீங்கிப்போகவேண்டிய காலம் நெருங்கிவிட்டதென்பதை அது சற்றும் அறிந்திலது. அந்த அந்நியஆள் பேரம்பேசி அக்காடிக்காக ஒரு பெருந்தொகை கொடுப்பதாய் இசைந்தானாகையால் அதை மறுத்துக் காடியைக் கொடுக்கமாட்டேனென்றுசொல்லக் காடனுக்குக் கூடாமையாய்விட்டது.

தங்கள் தோழனாகிய விக்கிரமவீரனுடைய பிரிவாற்றாமையினால் சூப்ப
ன் கோலன் என்னும் இரண்டு சிறுவர்களும் கண்ணீரும் கம்பலையுமாய் அன்
று இராத்திரி வெகுநேரம்வரையில் அக்கொட்டிலிலேயே இருந்துகொண்டு "ஐ
யோ! இக்காடியினால் நமக்கு எவ்வளவுசந்தோஷம் உண்டாய்க்கொண்டிருந்
தது, இதன் விசித்திரங்களை இனி நாம் எப்போதுபார்க்கப் போகிறோம்!"
என்று துக்கித்துக்கொண்டிருக்கையில், என்னவோ ஹானிவிளையப்போகிறது
என்று விக்கிரமவீரனுக்கு ஸ்பஷ்டமாய்த் தெரியவந்தது.

மறுநாள்காலையில் அவ்விரண்டு பேரக்காரர்களும் மறுபடியும் கொட்டி
லண்டை வந்தமாத்திரத்தில் காடன் கயிற்றை அவிழ்த்து அப்பேரக்காரர்க
ள்கையில் ஒப்பித்துவிட்டான். உடனே அவர்கள் அதைப் பற்றிக்கொ
ண்டு போகும்போது அது முற்றத்தையும் வீதியையும் கடந்துவருகையில்
தம்மை ஒருவேளை முன்போலத் துள்ளிக்குதித்துவிளையாட வெளியேவிட
ப்போகிறார்களாக்குமென்று நினைத்துச் சந்தோஷமாய்ப் பின்தொடர்ந்தது. தெ
ருவையுங் கடந்துபோகவே, "ஓ! ஓ! மோசம்வந்தது, இவ்வீட்டைப் பிரிந்து
போகவேண்டியகாலம் நமக்கு நேரிட்டுவிட்டதென்று விக்கிரமவீரன் துக்
கித்து, அடியெடுத்துவைக்க மனமில்லாமல் இரண்டு முன்னங்காலையும் நீட்
டிக் கீழேஉட்கார்ந்துகொண்டு போகமாட்டேனென்று முரட்டுத்தனம் பண்
ணியது. அப்பொழுது அதன் புதுஎஜமானன் கையிலிருந்த ஒருதடியைக்கொ
ண்டு உரப்பாகப் பலதரம் அடித்தான், பன்முறை உதைக்கவும் அவன் பின்
னிடவில்லை. விக்கிரமவீரனுடைய தோலும் மயிரும் கூடியவளாயில் தளமாயி
ருந்தபடியால் அவ்வடிக்கும் உதைக்கும் சளையாமல் வேண்டுமானால் இன்னும்
முரட்டுத்தனம் பண்ணிக்கொண்டிருக்கும்! ஆனால் அது அப்படி செய்யவி
ல்லை! ஒருபெருங் கூச்சல்போட்டது. விக்கிரமவீரன் இவ்வாறு அந்நியனொரு
வன் இழுத்துக்கொண்டுபோகுங்காட்சியைப்பார்க்கச் சகியாமல் உள்ளேபோ
யிருந்தசிறுவர்களும் காடனும் அக்கூச்சலைக்கேட்டுப் பரிதாபத்துடன் வெளி
யேவந்து தங்கள் துக்கக்குறிகாட்டியபோது, அதுகேட்டு விக்கிரமவீரன் சற்
றேமனந்தேறி எழுந்துநின்றது. அச்சமயம்பார்த்து அதன் புதுஎஜமானனாகிய
சேடனென்பவன் அடுத்தஒரு கிராமத்தின்வழியாக அதைப் பாபரவென்று
இழுத்துக்கொண்டுபோனான். வழியில் இடையிடையே அதை அடிக்க அவன்
அஞ்சவில்லை. இவ்வாறு இழுத்துக்கொண்டு சேடன் மற்றொருகிராமத்திற்கு
ள் பிரவேசித்துஅங்கே சத்திரம்போல் விக்கிரமவீரனுக்குத் தோன்றிய ஒரு
வீட்டுமுற்றத்தண்டைபோய் நின்றான். அப்போது உள்ளிருந்து வெளியே
வந்து நாட்டுப்புறத்தார் அனேகர் விக்கிரமவீரனை உற்றுப்பார்த்துக்கொண்டி
ருந்தார்கள்.

உடனே விக்கிரமவீரனைத் தோட்டத்தின்வழியாகக் கொண்டுபோய் வீ
ட்டுக்குப் பின்புறமாய்த் தனியேயிருந்த ஒரு அறையில் சேடன் அடைக்க
ட்டினான். இவ்வறைமுழுவதும் வெறும்பெட்டிகளும் உதவியற்ற வஸ்து
க்களும் நிறைந்திருந்தன. இடமோ முழுமையும் உதவியற்றது: விக்கிரமவீ
ரன் தான் முன்னிருந்த காடன்வீட்டின் அருமையையும் பெருமையையும் வி
யந்து துக்கித்துக்கொண்டிருந்தது. அன்று இராத்திரி அதற்குச்சில கட்டு
துண்டங்களையும் தானியங்களையும் ஆகாரமாக அவன் போட்டுவைத்தான்.

பொழுதுவிடிந்தபிறகு சேடன் அக்காடியை வெளியே தோட்டத்தில்
கொண்டுவந்து விளையாடவிட்டான். அப்போது அநேகர் திரள் திரளாகக்
கூடிக்கொண்டு விக்கிரமவீரனைப்பார்த்து அதிசயித்தார்கள். அத்தருணத்
தில் விக்கிரமவீரன் ஒருகுடை பிடித்துக்கொண்டும்கையிலொருகூடையைத்
தூக்கிக்கொண்டும் முன்னும் பின்னுமாகத் திரியவேண்டியதாயும், ஒருதடி
பிடித்துக்கொண்டு தள்ளாத கிழவனைப்போல் நடக்கவேண்டியதாயும், தா

ன் அது பரியந்தம் செய்தும்சண்டன் கேட்டுமிராத காரியங்களையெல்லாம் கற்றுக்கொண்டுசெய்யவேண்டியதாயும் நேரிட்டது.ஏனென்றால் சேடன் சாமானியனல்ல. கரடியை ஆட்டுவிப்பதற்காக என்னென்ன செய்யவேண்டுமோ அந்தவிஷயங்களிலெல்லாம் அதிநிபுணனென்றுதோன்றுகிறது.

இந்தப்படி சேடன் கரடியைப் பழக்கிக்கொண்டிருக்கையில் பறையடிப்பவனொருவனும்நாகசுரம் ஊதுகின்ற ஒருவனும் சேடனுக்குத் துணையாக வந்துசேர்ந்தார்கள். அவர்கள் அவ்விரண்டு கருவிகளைக்கொண்டும் வாசிக்கும்போது விக்கிரமவீரன் தான் ஒத்தறிந்து சுற்றிச்சுற்றி சில சமயத்தில் தன் எஜமானனோடும் சிலசமயத்தில் தனித்தும் கூத்தாடவேண்டியதாயிற்று. எப்போதாவது விக்கிரமவீரன் சற்றே அசிரத்தையாயிருந்தாலும்சரி, சோம்பலாயிருந்தாலும்சரி, உடனே தன் எஜமானன் கையிலிருந்ததடி அதற்குத் தருணசகாயம் புரிந்துவந்தது. நாளாவர்த்தியில் விக்கிரவீரன் கற்கவேண்டிய விஷயங்களையெல்லாம் நன்றாய்க்கற்று எஜமானனுக்கு வணக்கமாய் நடந்துவந்தது. அதனிடத்தில் சேடனுக்கும் அவன் தோழனாகிய கோரனுக்கும் அதிக விசுவாசம் உண்டாயிற்று.

சேடன் அக்கரடியைக் கிராமம் கிராமமாகவும் பட்டணம் பட்டணமாகவும் இட்டுக்கொண்டு யாத்திரைசெய்துவந்தான். சிலசமயங்களில் நாகசுரம் ஊதுவோன் கூடவருவான். மற்றும் சிலசமயத்தில் பறையடிப்போன மாத்திரம் கூடவருவான். அவ்வவ்விடத்திற் ஜனங்கள் திரள் திரளாகத் தங்கள் வீட்டுவாயிற்படியண்டை நின்றுகொண்டு இக்கரடியின் கூத்தைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். அப்போது அனேகர் இலந்தைப்பழம் உருளைக்கிழங்கு முதலியவற்றைக் கோல்கொண்டுவிளையாடி இனக்கும் இக்கரடிக்குப்போடுவார்கள். இவற்றையெல்லாம் விக்கிரமவீரன் தின்றும், "ஐயோ! நாம் காட்டில் விருட்சங்களுக்கும் புஷ்பங்களுக்கும் இடையிலே இனியதேனை உண்டுகொண்டு ஒருநாள் அநுபவித்த சுகத்துக்கு இவைகளெல்லாம் ஈடாகுமா?" என்று மன எக்கங்கொண்டது.

சொகுசான வாழ்க்கை சோம்பலுக்கிடம்.

லாப்லாண்ட்தேசத்து அரசனாகிய ஹேநீகோ என்பவன் அதிகபுஜபல பராக்கிரமமுடையவனாகி பகையரசர்களுக்கெல்லாம் ஒரு பெரும் சிங்கம்போலிருந்தான். நாளைக்கும் லாப்லாண்ட்தேசத்தார் அவனுடையவீராவேசத்தைப் பற்பலபாடல்கள்ரூபமாகப்புகழ்ந்துவருகிறார்கள். அவன் பராக்கிரமத்திற்கு ஏற்றபுத்தி தீட்சணியமும் பெற்றிருந்தான். அவன் இவ்வளவு சிறந்தவனானதற்குக் காரணமெல்லாம் அவன் பாலியகாலத்திலே சொகுசான வாழ்க்கையை முற்றும் வெறுத்து அதிசாமானியனைப்போல் உயிர்வாழ்ந்துகொண்டுவந்ததேயாம். அவன் அடிநாள்முதல் பஞ்சமெத்தை முதலியவற்றை நாடாமல் எழுகினாற்செய்யப்பட்ட தன்னுடைய போர்க்கவசத்தையே படுக்கையாகக் கொண்டுஉறங்கிவந்தான். போஜனவிஷயத்திலோ பசியையாற்றத்தக்க பதார்த்தங்களை உண்ட அளவு திருப்தியடைந்துவந்தானே யன்றி வேறெநாவுக்கு உருசியானஎந்தப்பதார்த்தத்தையும் விரும்பினவனல்லன். இத்தியாதி ஒழுக்கங்களினால் அவன் எவ்வளவும் சோம்பலின்றி

எக்காலத்தும் காரியங்களில் ஊக்கத்துடன் பிரவர்த்தித்துக் கொண்டு வந்தான். இப்படி யிருக்கையில் ஒருநாள் ஒரு காட்டுப்பன்றியை வேட்டையாடிப் பசிதாகத்தினால் மிகவும் இளைப்படைந்து ஒரு காட்டில் தனியேவரும்போது அங்கு ஒருமரப்பொந்திலே ஒருதேன்கூடு இருக்கக்கண்டுகிரகசாரம்போதாமல் அத்தேனை வயிறாக்குடித்துப் பசிதாகந் தீரப்பெற்றான். அந்த ஆகாரம் அவனுக்கு அதிக உருசியையும் பேரானந்தத்தையும் தந்தபடியினால் அவன் வீட்டிற்குவந்துஅன்று முதற்கொண்டு ஒவ்வொருவேளையிலும் சாப்பாட்டுக்குத் தனக்குத் தேனுங்கூட இருக்கவேண்டுமென்று வேலையாட்களுக்கு உத்தரவுசெய்தான்.

நாளாவர்த்தியில் அவ்வரசனுடைய நாவானது கெட்டு மேலும் மேலும் உருசியைத்தரத்தக்க பதார்த்தங்களையே நாடத்தலைப்பட்டது. சொகுசானபதார்த்தங்களை அவன் உட்கொண்டு வரவரப் படுத்துறங்கப்பஞ்சுமெத்தை முதலியவைகளையும், இன்னும் தேகத்திற்கு வேண்டியபற்பலஉபசாரங்களையும்சதா அவன்தேடவேண்டியதாயிற்று. அவன், [illegible]னுடைய ஆயுதங்களைச்சிங்காரித்து அலங்கரிக்கத்தலைப்பட்டான். தன்னுடைய தேகத்தில் திவ்யமான ஆபரணங்களை அணிந்துகொள்ளத்தொடங்கினான். இப்படிப்பட்ட சொகுசான வாழ்க்கையினாலே அவன்தேகம் நாளுக்குநாள் பலஹீனமடைந்தது, இப்படியிருக்கையில் ஒருநாள் நார்வே தேசத்துப்பகையரசனொருவன் இவன்மேல்படையெடுத்துவந்தான், அப்போது ஹேகோ என்பவன் தன் தூக்கத்தைவிட்டெழுந்து அவனோடுபோர்புரியச்சென்றான், இவனுடைய சேனையும் அப்பகையரசனுடைய சேனையும் நெடுநேரம் யுத்தஞ்செய்துகொண்டிருக்கையில் நார்வேதேசத்துப் பகையரசன் இவனைப்பார்த்து, நம் சேனைகளுடையசண்டைஒருபுறத்திலிருக்கட்டும்,நாமிருவரும்தனியேகலந்து சண்டைசெய்துஜயாபஜயத்தைத்தெரிந்துகொள்ளலாமென்றான். அதுகேட்டு ஹேகோஎன்பவன்அதற்குடன்பட்டுஅவ்வாறே சண்டைசெய்தபோது அவன்பலஹீனத்தினால்தோல்வியடையும்சமயம்பார்த்து அவனுடையகழுத்தை அந்நார்வே தேசத்து அரசன் வெட்டினான், தெய்வகதியாய் அவ்விருவரும் சண்டைபோட்டவிடம்முன்னே ஹேகோதேன்குடித்த இடமாயிருக்கநேர்ந்தது. சிலகுறிகளால் அவ்விடம் இன்னதுதானென்று தெரிந்துகொண்ட ஹேகோ தன்தலை உடலைவிட்டுமேலெழும்பிப்போகும்போது, "என்னை இந்தப்படிஇப்போதுவெற்றிகொண்டது நார்வேதேசத்துப்பகையரசனுடைய கையல்ல, இங்கு யான்சிலவருஷங்களுக்குமுன்னே குடித்ததேனேயாம்," என்று கூக்குரலிட்டுக்கொண்டே கீழேவிழ உயிர்துறந்தான், ஆகையால் எப்போதும் சாதாரணமான அன்னபானாதிகளை யுட்கொண்டும் நடையுடைபாவனைகளை யநுசரித்துக்கொண்டும்இருக்கிறவர்கள் தேகபலமும் புத்தி தீட்சணியமும் பெற்று நெடுநாள் தேகாரோக்கியத்துடன் உயிர்வாழ்வார்கள், தீர்க்கஆயுளின்றிப்பலகாலும் நோய் முதலியவற்றினால் பிடிக்கப்பட்டு அகாலமரணமடைபவர்கள் பெரும்பாலும் அதிபோகபாக்கி

யங்களை நகர்த்துவரும் செல்வர்களேயென்று நாம்பிரத்தியட்சமாக உலகத்திற் காணலாம். கிராமங்களில் வசித்துக் கூழ்குடித்துக்கொண்டு நீர்ச்சியுடன் திரியும் நாட்டுப்புறவாசிகள்தேகபலம்நிரம்ப அமையப்பெற்றுப்பிணிமுதலியவையற்றுத் தேகாரோக்கியத்துடன் எழுபது எண்பது வயதுவரையில் சுகஜீவிகளாயிருந்து வருவதை நாம்கண்கூடாகக் காணலாம். சொகுசானவாழ்க்கை சோம்பலுக்கிடந்தரும். சோம்பலால் விளையாததீமையும் உலகத்திலுண்டோ?

"படியுடையார்பற்றமைந்தக்கண்ணுமடியுடையார்
மாண்பயனெய்தலரிது."

நிலமுழுவதும் ஆண்ட அரசதுசெல்வம் ஒருவன் அடையப்பெற்றானேயாயினும் அவன்சோம்பலுடையவனா யிருக்கின் பெரும்பயனையடைதலில்லையாம் என்று பொருள்படத்தெய்வப்புலவர்கூறிய அமுதவசனத்தின் உண்மையை ஒவ்வொருவரும் அநுபவவாயிலாகக்கண்டறியலாம்.

சொகுசானஉணவினாலும் அமிதமானஆகாரத்தினாலும் பற்பலவியாதிகள் காணுகின்றனவென்றும். அவைகாரணமாக மரணம் சீக்கிரம் நேரிடுகிறதென்றும் ஆங்கிலேய தத்துவ சாஸ்திரிகளும் கூறியிருக்கின்றார்கள். இவ்வுண்மையையறிந்தே,

"ஒருபோதுயோகியே யொண்டளிர்க்கைமாதே
யிருபோதுபோகியேயென்ப—திரிபோது
ரோகியேநான்குபோதுண்பானுடல்விட்டுப்
போகியே யென்று புகல்."

ஒருநாளையில் ஒருபொழுது புசிப்பவன் யோகியென்றும், இருபொழுது புசிப்பவன் போகியென்றும், மூன்று பொழுது உண்பவன் ரோகியென்றும், நான்குபொழுது தின்பவன் பிணமென்றும் தத்துவசாஸ்திரிகள் கூறியிருக்கும் வாய்மையையோசிக்குமளவில், உணவுசுருங்கச்சுருங்கத்தேகாரோக்கியமும் புத்திதீட்சணியமும் உண்டாகின்றனவென்று தெரியவருகிறது. இதனால் கேவலம்பட்டினியாயிருத்தலல்லவென்றுகொள்வது விதண்டாவாதமாய் முடியும். முப்போது புசிப்பவனைரோகியென்றும், நாற்போதுண்பவனைப்பிணமென்றும் சொன்னது அவர்கள் தற்காலத்தவ்வாறிராவிடினும் அதிசீக்கிரம் அவ்வாறுவார்களென்னு முறைநோக்கியே கூறியதென்று அறிக.

வேலூரில் சிலவருஷங்களுக்குமுன் அரசுபுரிந்துவந்த இராயர் தமது அப்பாஜியென்னும் மந்திரியுடன் நகர்வலம் வந்துகொண்டிருக்கையில், ஏரிமடையினின்றும் அதிவேகத்துடன் வீழ்ந்துகொண்டிருந்த ஜலப்பிரவாகத்தையும் ஒருபொருளெனமதியாமல் அங்கிருந்த ஒரு பெரும்பாறையின்மேல் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த ஒருபண்ணையாளைச்சுட்டி இராயர் மந்திரியைநோக்கி, இவனுடையதேகம் கல்லா? மரமா? இவ்வளவு உணர்ச்சியற்றிருக்கிறானே? இவனுக்கு இல

தோஷங்காணாதா? என்றபோது மந்திரி, அதற்கு, ஐயா! இன்னும்மூன்றுமாதத்தில் இவனுடையதேக நிலைமையைத்தங்களுக்குக் காட்டுகிறேனென்று சொல்லி, அந்தப்பண்ணையாளைவரவழைத்து இராயருக்குத்தெரியாமல் அவனுக்குத் தன்வீட்டில்மூன்றுமாதகாலம்வரையில் அதிகசொகுசான அன்னபானாதிகளையும், பல்லக்குசவாரிமுதலிய போகபாக்கியங்களையும் தந்தனர். பிறகு ஒருநாள் அப்பாஜி அப்பண்ணையாளைப்பல்லக்கு சவாரிசெய்துகொண்டு இராஜசமுகத்துக்குவரும்படி உத்தரவுசெய்து தாம்இராஜ சமஸ்தானத்தில் முன்னேபோயிருந்தார். அப்போது அப்பண்ணையாள் ஆர்வாரத்துடன் பல்லக்கு சவாரிசெய்துகொண்டு இராஜனுடைய அரண்மனைக்குச் சமீபமாகவரும்போது அங்குபோட்டிருந்தசிலவாழைமட்டைகளைப்பல்லக்குசுமப்போர் மிதிக்கநேர்ந்தது. உடனே அப்பண்ணையாள் பல்லக்கைவிட்டிறங்கி இராஜசமுகத்திற்குவரும்போதே தும்மல், இருமல் முதலிய ஜலதோஷக்குறிகள் அவனிடத்துத்தோன்றின. இதைக்கண்டமந்திரி அவனுக்குத்தக்க உ[illegible]ஞ்செய்து அவனுக்கு உயர்ந்த ஆசனந்தந்து, ஐயா! வீட்டைவி[illegible]டும்போது ஒன்றுமில்லையே! இதற்குள்ளே ஜலதோஷம் [illegible]குஎவ்வாறுகண்டது என்றார். அதுகேட்டு கனவான்போலு[illegible]பண்ணையாள்-அரண்மனைக்குச் சமீபமாகச்சில வாழைமட்டைகளிருந்தபடியால் அவற்றைப்பல்லக்கு ஆள்கள் மதியின்மையால் மிதித்துக்கொண்டுவந்தகாரணத்தினாலே ஒருவேளை அந்தவாழைமட்டைகளின்சீதளம் என்தலைக்கேறியிருக்கலாம், ஜலதோஷத்திற்கு வேறே என்னகாரணமிருக்கப்போகிறது? ஒன்றுமேயில்லையென்றான். இதைக்கேட்டுக்கொண்டிருந்த இராயர், இதென்னவிந்தை! இப்படியும் ஒரு செல்வச்சீமான் இருப்பானோ? என்று மந்திரியை இரகசியமாய்க்கேட்க, அவர்ஐயா! இதற்குக்காரணம் பிறகுசொல்லுகிறேனென்றுகூறி, கனவான்போல்தோன்றிய அப்பண்ணையாளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அரசனைப்பார்த்து, மூன்றுமாதத்திற்குமுன்னே ஏரிமடையில் படுத்துறங்கிக்கொண்டிருந்த பண்ணையாள்தான் இந்த பெரியவர், இவனுக்கு நான் பலநாளாகச்சொகுசான அன்னபானாதிகள் தந்து இவனைத்தேவேந்திரபோகத்தில்வைத்திருந்தேனாகையால் இவனுக்கு இப்போது இவ்வளவு அற்பகாரணத்தினாலே ஜலதோஷங்கண்டது என்றார். இராயரும் சந்தேகந் தெளியப்பெற்றார். ஆகையால் சொகுசானவாழ்க்கையைக் காட்டினும் ஒருவனுக்குக் கூற்றுவன்வேறில்லையென்பதை நாம்சுருதியுக்தி அநுபவவாயிலாகத் தெளிந்துகொண்டு, இயன்றவரையிலே இந்திரியங்களுக்கு அதிக இன்பத்தைத்தாத்தக்கனவும், எளிதில் எங்கும் அகப்படக்கூடாதனவுமான சொகுசானபதார்த்தங்களை நாடுவதைவிட்டொழித்துச் சாதாரணபதார்த்தங்களைக் கையாண்டுசுகஜீவிகளாயிருப்போமாக.

வர்த்தமானக்குறிப்புகள்.

பூமிக்குள் ஓர் நதி.—சில தினங்களுக்குமுன் பிரான்ஸ்தேசத்தில் சுரங்கம் வெட்டிக்கொண்டிருந்த காலத்திலே பூமிக்குள் பாய்ந்தோடும் நதி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. சில நிபுருஷர்கள் ஒரு படகிலேறி அந்நதியின் விஸ்தீரணத்தைக் கண்டறிந்தார்கள். அது ஏழுமைல் நீளமுள்ளதாகவும், அதனுடன் ஏழு ஏரிகள் சம்பந்தப் பட்டுள்ளதாகவும், முப்பத்திரண்டு சிற்றாறுகள் அதில் வந்து கலக்கிறதாகவும் விவரம் தெரியவந்தது.

பிரஜைகளின் கவனமின்மை.—பிரிட்டிஷ் ராச்சியத்தில் ஒரு வருஷத்திலே சுமார் 25000 கடிதங்கள் மேல்விலாசமில்லாமல் அனுப்பப்படுகின்றனவென்றும், அவற்றுள் அனேக கடிதங்களில் தலைகள் போதுமானவையாய் ஒட்டப்படுவதில்லையென்றும், போய்ச் சேரவேண்டிய இடங்களில் சேராமல் திருப்பிவிடப்பட்ட கடிதங்களின் தொகை ஒரு கோடியே ஐந்து லட்சமென்றும் கேள்வியுற்று நாம் பிரஜைகளின் கவனமின்மைக்காகத் துக்கிக்கின்றோம்.

தூக்கத்தில் நடப்போர்.—பர்லின் என்னும் பட்டணத்தில் சகோதரன் சகோதரியுமாகிய இருவர் தூங்கிக்கொண்டிருக்கையில் திடீரென [illegible] தாங்கள் காணும் கனவுக்கு ஏற்றவாறு வெகுதூரம் நடந்துபோவதும், வ[illegible]தையாவேதுமாக இருக்கிறார்களாம். அவர்கள் திரும்பும்பொழுதும் நடக்கும்பொழுதும் உறங்கிவிடுகிறார்களாம். தூக்கம் தெளிந்தவுடனே முன்விட்ட வேலையையும் சம்பாஷணை முதலியவற்றையும் மீண்டும் அவர்கள் தொடங்குகிறார்களாம். ஆனால் நித்திரை செய்துகொண்டே வீதிகளில் யாதொரு ஆபத்துக்கும் உள்ளாகாமல் நனவைப்போலவே நடந்து வீடுபோய்ச் சேருகிறார்களாம். விசித்திரமான இவ்வியாதியின் மூலகாரணத்தையறியக் கபாலலட்சண சாஸ்திரிகள் பலவாறாக ஆராய்ச்சி செய்துவருகிறார்கள்.

நகைகளைப்பற்றிய பயித்தியம்.—இத்தேசத்து ஸ்திரீகளுக்கு நகைகளிடத்துள்ள பேராவலுக்கு அளவேயில்லையென்று சொல்லலாம். அவர்களிடத்து இது விஷயமாக உண்டாகும் அறியாமையினாலன்றோ அனேக குடும்பங்களும் நமது தேசமும் க்ஷயம் அடையும். இத்தேசத்துக்குச் சுமார் 33¼ கோடி ரூபாய்க்குச் சரியான வட்டி வருஷந்தோறும் நஷ்டமாய்விடுகிறதென்று கணக்கிட்டு ஒரு[illegible] தக்கப்படுகிறார். நகைகள் ரூபமாக வீணே கிடக்கும் பெருந்தொகைகள் எவ்வளவு காரியங்களுக்கு உபயோகமாதல்கூடும்!

மின்மினிப்பூச்சிகள்.—சிலகுருவிகள் மரப்பொந்துகளிலும் வேறேஇடங்களிலும் தாமிருந்து முட்டை குஞ்சு முதலியவற்றைக் காப்பதற்காகக் கட்டுங் கூடுகள் இருள்சூழ்ந்திருக்கிறதெனக்கருதி மின்மினிப்பூச்சிகளைக்கொண்டுவந்து கூடுமுழுவதும் (Globes) நிலவொளிவட்டத்தீபங்கள் போலவும், (Wall Sheds) சுவரொளிவட்டத்தீபங்கள்போலவும் ஓர்வகைப்பிசினைக்கொண்டு ஒட்டிவைக்கின்றனவாம். எண்ணெய்வர்த்தி முதலிய செலவில்லாமலே இக்குருவிகள் தீபங்கள் தேடிக்கொண்ட விசித்திரமே விசித்திரம்!

PRINTED AT THE ALBINION PRESS:—MADRAS.

146688